



# நினைத்ததை முடிப்பவள்




ஹரிஹரன் பாட்டில் லயித்தபடி சிநேகிதி இருவருமாய் துணிகளை மடித்து அடுக்கிக்கொண்டிருந்தன

ஒரு ஜார்ஜெட் புடவையை உதறிவிரிக்க, காற்று, மெல் அத்துணியைப் படபடக்கச் செய்தது சீண்டலாய்.

"ஜன்னலைச் சாத்திரு அம்ரு."

"ம்ப்ச். இருக்கட்டும். மதுரையில எங்க ஃப்ளாட்ல கா நுழைய வேணாங்கும்."

"இங்கு இஷ்டத்துக்குப் புகுந்து சண்டித்த பண்ணுது...ம்?"

"இதுக்குக் கொடுத்து வச்சிருக்கணும் வசு."

"உனக்கு கிராமம் நிஜமாலுமே பிடிச்சிருக்கு இல்லியா?"

"நா எதிர்பார்த்தது போலியே இருந்துதே... வாய்க்கால், வரப்புல பனைமர வரிசை, தோப்பு சுத்தமான காத்து, வேஷம் போடாத மக்கள்னு."

"களக்காடு மலைக்குப் போனப்ப.. சின்ன குழந்தை மாதிரி ரசிச்சே."

"அதிலேயும் அந்தக் காட்டருவிக் குளியல்... யப்பா என்ன சுகம்."

உடம்பு சிலிர்த்தாள் அம்ருதா.

துணி மடிப்பை நிறுத்தினாள் வசுமதி.

"இன்னும் ஒரு வாரம் தங்கிட்டு போயேண்டி.."

"நாலாம் நாள் நீ குடும்பத்தோட தும்கூர் போறே.. உங்க சித்தி வீட்டுக்கு நினைப்பில்லையா?"

"வேலைக்கு இல்லியே.. வெட்டிக்குத்தான? அதாவது ஒரு ஹாலிடே அதனால..."

"ட்ரெயின் டிக்கெட் உங்கம்மா பர்ஸிலேயிருக்குது. அநாவசியமாக குழப்பாதே."

"எனக்குமே நீ வந்ததும் எங்க ஊர் பிடிச்சு போச்சு. அம்ரு.. சேர்ந்து சுத்தறப்ப அத்தனையும் தனி அழகாத் தெரியுது."

அம்ருதா பெட்டியை மூடிவிட்டு தோழியை வாஞ்சையுடன் பற்றினாள்.

"தாங்க்ஸ் வசு. திருப்தியாய் ஒரு விடுமுறை கிடைச்சது உன்னால் ஆனா எங்க வீடு எனக்காய் காத்திட்டிருக்குமே.. வர்ற வழியில அப்பா, அம்மாவை பேருக்கு எட்டிப்பார்த்துட்டுக் கிளம்பிட்டோம்."

"ம்ம.. நீ மறுபடி இங்க வரணும்ப்பா."



"பின்ன? உங் கல்யாண சாக்குல மறுபடி இங்க ஒருவார[illegible] டேரா!"

"அதுக்கு இன்னும் குறைஞ்சது நாலு வருஷம் ஆகு[illegible] இப்பமே விருந்தாத்தான் போறேன். பிறகென்ன? வ[illegible] இடியாப்பம் ஆறியிருக்கும்."

"தொட்டுக்க அத்தை ஒரு சொதி செய்றாங்களே.. ப்ரமாத[illegible] செய்முறை கேட்டு எழுதி வச்சுகிட்டேன். செஞ்சு அசத்தணும்[illegible]"

"இந்த ருசி அமையாதுடீ அம்ரு. அது இந்த ஊ[illegible] தேங்காயிலேயும் தண்ணியிலேயும் வர்றது."

பீற்றினாள் வசுமதி.

ஆனால் சாப்பிட்டதும் பேச்சும் சிரிப்பும் மிக அடங்[illegible] விட்டன.

பிரியப் போகும் சோர்வில் மௌனமாயிருந்தார்கள்.

வசுவின் தாய் புதுப்புடவையுடன் ரவிக்கைத் து[illegible] வைத்துத் தர அம்ருதா அழுது விட்டாள்.

"எதுக்கு அழணுங்கறே? மதுரைக்கும் இங்கைக்கு[illegible] நாலே மணி நேரப் பிரயாணந்தான? வரப் போவ இருப்போ[illegible] இப்பமே நான் மதுரையில என்ன ஜோலி உருவாக்கலாம்ங்[illegible] யோசனையில இருக்கேம்மா... தங்க, உண்ண உவ்[illegible] இருக்குதுல்ல.. என்னம்மா?"

மீசை முறுக்கியபடி குழலில் சிரிப்பு சேர்த்தார் வசுவி[illegible] அப்பா.

அவர் அம்ருதாவின் தாய்வழியில் மூக்கு சுற்றிய சொந்[illegible] சந்திக்க நேராதவரை இருளிலிருந்த சொந்தம். பெண்கள் இ[illegible] ரும் சேர்ந்து படிக்க, பழகியிருந்ததில் வெளிச்சங் கண்டு பூத்[illegible]

"நீங்க தும்கூர் போயிட்டு வர்ற வழியில மதுரையில வ[illegible] தங்கித்தாம் போகணும் மாமா..."

"ஏம் போற வழி என்ன பாவஞ் செஞ்சுது?"

சிரித்தாள். "அப்ப சரி... அத்தை போயிட்டு வர்றேன்."

"வாம்மா மகாராசி..."

வசுவும் அவள் தந்தையையும் உடன் வரக் கிளம்பினார்கள்.

"பத்தே காலுக்கு ஒரு பஸ் உண்டு.. நல்ல வண்டி, அதிகமா அலுங்கிக் குலுங்காது..."

"எனக்கு பிரயாணம் பழக்கந்தாம் மாமா.."

"திருநெல்வேலி ஜங்ஷன் வரை கூட வேணாங்கற... கவனம்மா... அங்கேருந்து மதுரை பஸ்ஸுக்கு..."

"மாறிக்குவேன் மாமா.. கவலைப்படாதீங்க..."

எதிர்பார்த்ததைவிட சீக்கிரமாய் பஸ் வந்துவிட,

இதிலேயே ஏறிடறேம் மாமா.. கூட்டமில்ல. உக்காந்து போலாம்."

பெட்டியைத் தூக்கிக் கொண்டாள் அம்ருதா.

"அதுவுஞ் சரிதான்... பத்தேகால் பஸ்ல கூட்டம் ஜாஸ்தி."

"வரேம் மாமா... வரட்டா வசு?"

ஈர விழிகளுடன் படிகளில் நின்று கையசைத்தாள்.

"உள்ளாரப் போம்மா..."

கண்டக்டர் அதட்ட, 'ஏர் பேக்' குடன் லாவகமாய் நகர்ந்து இடம் தேடினாள்.

"கடையிலேருந்து போன் போடுதேம்மா... பத்திரம்..."

பஸ்சின் கூடவே ஓடி வந்து கையசைத்தார் வசுவின் அப்பா.

"சரி...பை. வசு..."

வெளியிலிருந்து பார்வையை மீட்டு, உள்ளே அமரத் தோதான இடம் தேடினாள். கூடைகளும் சாக்குகளும் இடத்தை



அடைசலாக்கியிருந்தன. பஸ் முழுக்க கிராம வாசனை இருந் மொச்சை, விளக்கெண்ணை, பழம், புழுதி என்ற கலவைய மணம்.

இடது பக்கத்தின் மூன்றாம் இருக்கையைத் தேர்ந்தெடு நகர்ந்தவள் "மன்னிக்கணும்... இந்தப் பை?" என்றாள் மென்

இலக்கின்றி வெளியே பார்வையை விட்டிரு அப்பெண்மணி திரும்பினாள்.

அவசரமாய் பையை மடிக்கு மாற்றி இடம் தந்தார்.

"உக்காரும்மா."

அமர்ந்தவளைப் பார்வை அலசியது.

"மூச்சு வாங்கறியே, தண்ணி வேணுமா?"

"இல்ல.. ஓடி வந்து ஏறினேன் அதான்."

"எங்க பயணம்?"

"மதுரைக்கு."

"மனசுல துணிச்சலாயிருக்குதுங்க இந்த கால பிள்ளை உடம்பின் வலுதான் போதலை.. மணிக்கு எத்தனை ஓடினா இளைக்காது. உயரமும் ஐஞ்சரை அடி. நாந்தான் சொன்ே நீ போலீஸ் உத்தியோகத்துக்குப் போகணும்டீன்னு.. இ அப்படியே ஆயிட்டாளே... அவளைப் பாக்கத்தான் பாளை கோட்டை போறேன்."

"நீங்க டீச்சரா?"

ஏர்பேகை வாகாய் காலடியில் வைத்த அம்ருதா கேட்ட பாதி தலை நரைத்த அப்பெண்ணின் சிரிப்பு விரிந்தது. பற் பழுதின்றி பளபளத்தன.

"எப்படி கண்டுபிடிச்சே... ஜாஸ்தி பேசறத வச்சா?"

"யூகந்தான். தவிர உங்க கொண்டை, புடவையைக் 'பின்' செய்திருக்கிற தினுசு...இப்படி..."

“பொண்ணுங்க புத்தி அலாதிதான் ‘சட்’டுனு கிரகிச்சு கணிச்சிடும். இது இப்படின்னு... உன் யூகமும் தப்பலை பாரு.”

இவள் புன்னகைத்தாள்.

“ஒத்துக்கறேல்ல நீ?”

“எல்லாம் பொண்ணுகளும் அப்படின்னு சொல்ல முடியாது. சிலர் அதிகம் கவனிப்பாங்க இயற்கையாவே கணிக்கிற திறமையும் இருக்கக் கூடும்.”

இவளை உன்னிப்பாய் பார்த்துவிட்டு,

“அதுவும் சரிதான்... ஆதிகுளத்துல நான் மட்டுமா பொம்பளை? ஆனால் எனக்கு மட்டுந்தான் அந்த நெருடல்?”

பாதி தனக்குள்ளாகவே பேசினாள் அப்பெண்.

பேச்சு புரியாததால் இவள் வெளியே விரைந்து கிராமத்து காட்சிகளை பார்க்கலானாள்.

“டாக்டர் தாமஸும் கூட கண்டுபிடிக்கலியே... கொஞ்சம் சந்தேகம் ஏற்பட்டிருந்தாலும் அவர் பரிசோதனை செய்திருக்கணுமே... அதாவது பிரேத பரிசோதனை...”

குரல் தணித்து அப்பெண் பேச அம்ருதா கூர்மையானாள்.

“நீங்க சொல்றது எனக்குப் புரியலை.”

சொல்லும் போதே அவளுக்குள் அந்த சந்தேகம் பார்க்கக் கண்ணியமாய் இருந்தாலும் இப்பெண்மணி சித்தம் கலங்கியவளோ? ஆனால் அரை அல்லது கால் பைத்தியமானாலும் இத்தனை நறுவிசாய் உடுத்தி தனியே பயணிக்க வாய்ப்புண்டா?

“எனக்கும் அத்தனை சூட்சுமம்னு பீத்திக்க முடியாதுதான். காலாகாலத்துல கவனிச்சு நிறுத்தியிருந்தேன்னா ரெண்டு உயிர்... அதுவும் இளம் உயிருங்க பலியாயிருக்காது.”



“....”

“உனக்குப் புரியலைல்ல? புரிய வேண்டாம்ம சொன்னாலும் யார் தான் நம்புவா? நம்பக்கூடிய மாதிரியா கதையா அல்லது ஆளா? ஊரில என் சந்தேகம் இப்படின் சிரிப்பாங்க... இப்ப நீ நினைக்கறது போல நான் அ பைத்தியம்கற பேச்சு வரும்.”

இவளிடம் பேசினாலும் அப்பெண் தனக்குள்ளாக பேசுகிறாள் என்ற பிரமை ஏற்பட்டது. ஆனாலும் த நினைப்பைச் சரியாகப் புள்ளி குத்தியது கண்டு, அசட் சிரிப்பொன்று சிரித்து சமாளித்தாள்.

“புரியலைன்னு யோசிச்சேம்மா... வேறில்லை...”

“புரிய வேண்டாம்பா-தளிராய் இருக்கற நீ படிப்பு, வே கல்யாணம்னு யோசி... எல்லாம் நல்லதா அமைய ஆசைப சாவு... அதிலேயும் கொலை பற்றி யோசிக்க... ஏம் பேச வேணாம்.”

அம்ருதாவின் ஆர்வம் அதிகமானது.

முன்பின் தெரியாத இப்பெண்ணின் பேச்சு எத்த நம்பகமானது என்ற சந்தேகத்தையும் மீறிய ஆவல்.

“நான் நிறைய க்ரைம் புக்ஸ் வாசிப்பேம்மா...”

“நானுந்தான் வாசிச்சதுண்டு... ஆனா நிஜத்தில் கொ சுவாரஸ்யமானதில்லை. பயங்கரம் அது... அதிலேயும் நமக் தெரிஞ்ச இளம் உயிருங்க பிடுங்கப்படுகிறது... சகிக்கலை... பேரு என்னம்மா?”

“அம்ருதா...”

“நல்லது. என்னை சாரு டீச்சர்ம்பாங்க. இருக்கறது அ குளம்னாலும் களக்காடு ஸ்கூல்லதான் வேலை. பே வருஷந்தான் ரிடையரானேன். வீட்டில விச்ராந்தியா உட்க

பிறகுதான் வேண்டாததெல்லாம் கண்ணுக்கும் புத்திக்கும் படுது..''

''கொலைன்னா... யார் கொன்னானு சந்தேகப்படறீங்க?''

டீச்சரைப் போலவே இவளும் குரல் தணித்து கேட்டாள்.

''உள்ளூர்ல அதைச் சொன்னா யாரும் நம்ப மாட்டாங் கன்னுதாம்மா இப்ப மணியத் தேடிப் போறேன் விவரம். எடுத்துச் சொன்னா, அவளுக்கு அடுத்து என்ன செய்யணுங்கறது தெரியும். அவளே வந்தாலும் வருவா... வேற யாரு இந்த மேட்டுல நிக்கற குக்கிராமத்துக்கு வருவா? அதுவும் எங்கிட்ட எந்த சாட்சியுமில்லாம... ஏன்னு கேட்டாக் கூட எனக்கு பதில் தெரியாது.''

'புத்தியில் ஏன் புல் முளைத்தது?

வேர்களில் ஏன் விஷம் கலந்தது?'ன்னு ஒரு கவிதை வாசிச்சேன்... பதில் தெரியா கவிதை மாதிரித்தான் இந்தக்... கொலைகளும்..''

பஸ்சில் கூட்டம் கூடியது. கண்டக்டர் சுற்றி வந்து டிக்கெட்டுகளைக் கிழித்து காசு எண்ணினார்.

''சாட்சியில்லைன்னா சிரமந்தான்...''

தலையாட்டிய டீச்சர் சற்று நேரம் ஏதும் பேசவில்லை.

''ஆனா எனக்குள்ளே சந்தேகமில்லம்மா. என்ன ஏதுன்னு நேர்மையான சுதாரிப்பா இருக்கணும்? இப்ப ஒரு கிராமத்துல போலி சாமியாரா ஒருத்தன் வரிசையா பல பேரைக் கொன்னு புதைச்சிட்டு இருந்திருக்கான்... அத்தனைத் தலை காணாம போயும் ஒத்தர் வாயும் திறக்கலியே..? அதாம்மா கிராமம்... அறியா மக்கள்-ஆதிகுளத்தை கிராமம்னு சொல்ல முடியாது. அது ஒரு எஸ்டேட்னு சொல்லலாம். எட்டு, பத்து சின்ன சின்ன தோட்டங்க சேர்ந்த எஸ்டேட்... அதிலே தோட்ட, வீட்டு



வேலை செய்றவங்கன்னு மேல ஒரு பத்து குடித்த அவ்வளவுதான்..''

''இப்ப இறந்தது யாரு?''

''வேலை பார்த்த எளியதுங்கதான்... வீட்டு வே பார்க்கற பொண்ணு சென்னி. 'விஷத்தக் குடிச்சுட்டா பாதகி'ன் ஊர்ல பேச்சு. ஆனா அவ எந்த விஷங் குடிச்சான் தெரியலை... அப்படி அஞ்சின பொண்ணும் இல்ல அவ. த ஜிமிக்குக்கு எங்கிட்ட 800 ரூபா வரை தந்து சேத்தவ, தீபாவளிக்கு என்ன டிஸைன் புடவை எடுக்கலாம்னு தி யோசிக்கிறவ அப்படி சலபத்தில உயிர விட்டிருவாளா?''

''ம்ம்... ஆனா அதிக ஆசையும் குறைஞ்ச படிப் இருக்கற பொண்ணுங்க எதுனாலும் செய்யலாம்.''

டீச்சர் இவளை புது மதிப்புடன் பார்த்தார்.

''மறுக்கலை. ஆனா சென்னி சாகற ஆளில் வாழ்க்கைய அனுபவிக்க அசாத்திய ஆசை அவளுக் ஆனா அவ செத்தப் பிறகு தான் எனக்கந்த பார்வையே அர்த்தம் புரிகிறது... அந்தக் கண் வச்ச குறின்னு...''

பஸ்சில் கூட்டத்தோடு சலசலப்பும் அதிகமாயிருந்தது.

''அதிலேயும் பன்னெண்டு வயசுப் பையனைக் கொ அநியாயமில்லையா... சப்பு ரொம்ப வாலுதான்... ஆனா அ பார்வை இப்ப ஜெஸி மேல விழவுந்தான் நா கிளம்பிட்டே இத இப்படியே விட்டா ஆதி குளத்துக்கே ஆபத்துதான்...''

''அது யாரு... ஜெஸி?''

''பத்து வருஷமா படுக்கையில கிடக்கற சீக்காளி அ அவளைச் சீக்கிரமா அனுப்பறது தேவையா?''

''என்ன வியாதி?''

''வாதங்கறாங்க... பின்ன நரம்புக் கோளாறுன்றாங்க... தேறுற மாதிரியும் தெரியலை... டாக்டர் தாமஸும் மருந்

மாத்தி மாத்திதான் தர்றார் பாவம்... சாண் தேறுனா முழம் சறுக்கிடறா... இனி ஒரேயடியா அவ கதை முடிஞ்சிரு மோன்னு..."

"கொல்... கொலை அத்தனை சுலபமா?"

"மத்த விஷயங்களைப் போலத்தான் அதுவும்... பழக பழக சுலபமாயிடுது... அதுவும் சிலரை யாரும் சந்தேகப்படற தில்லையா..."

"ஜங்ஷன் பஸ் ஸ்டாண்ட்..."

கண்டக்டரின் அறிவிப்பு பேச்சுக்கு முற்றுப்புள்ளி இட்டது.




தனக்கு மட்டுமாய் காபி கலக்கிக் கொண்டு அமர்ந்தாள் அம்ருதா. வெளியே அதற்குள்ளாக கே.கே. நகர் பரபரக்க ஆரம்பித்திருந்தது. ஆனால் பெற்றவர்கள் இல்லாத வீடு அலாதி அமைதியிலிருந்தது.

டேப்பில் பக்தி பாடல், குக்கர் மிக்ஸி அலறுதல், அவ்வப்போது அப்பாவின் அசட்டு ஜோக், அம்மாவின் அதட்டல் என்று அமர்க்களப்படும் வீடு இது.

நேற்று மாலை இவள் படியேறிய போது ஹாலில் பெட்டி, படுக்கை ஆயத்தமாகி நின்றன.

"வாடி... வா... நல்ல சமயம் பார்த்தே ஃப்ரெண்டு ஊருக்குப் போக."

"என்னாச்சும்மா?" அம்மா அதட்டலாக வரவேற்றாள்.



"அம்ரு என்ன பண்ணுவா ரத்னா? படியேறுறவ
கலங்கடிக்காத. ஒன்னுமில்லம்மா... அக்காவுக்குக் குழ
பிறந்தாச்சு... அதான்."

முகம் மலர்ந்தவளுக்கு மறுகணம் கலவரத்துக்
காரணம் பிடிபட்டது.

"மே மாசக் கடைசிதானப்பா ட்யூ? இப்ப ஏ
ஆரம்பந்தான? 'குறை பிரசவம்டீ ஆனா பேரன் பிழைச்
கான். இன்குபேட்டர்ல வச்சிருக்காங்களாம்.' டெல்
அனீதாவும் மாப்பிள்ளையும் தனியே தவிக்க... நாம போ
தான் அதுங்களுக்கும் தெம்பு."

"நானும் வர்றேம்மா...?"

குரல் நடுங்கக் கெஞ்சினாள்.

'விடுமுறை சமயமாச்சே ரெண்டு டிக்கெட் கிடைக்க
குதிரக் கொம்பாயிருந்தது அம்ரு. பெரிய மேனேஜர்
சமாளிச்சேன். தவிர அக்கா வீடு ரொம்ப சின்னது. அம்மாவு
தனியே பிரயாணம் செய்து பழக்கமில்லங்கறதால நான்
போறேன். ஆஸ்பத்திரியிலேருந்து அனீதாவும் குழந்தை
நல்லபடி வீடு திரும்பினதும் நான் கிளம்பிடுவேன். பத்து ந
வந்திருவேன்.

"சரி... சரிப்பா."

"காலைல வசுமதி அப்பாக்கு போன் போட்டு வி
சொன்னேன். அவரும் 20 நிமிஷம் முன்னே போன்
வந்துட்டியான்னு விசாரிச்சார்..."

போன் மறுபடி அழைத்தது.

"அவராத்தான் இருக்கும்".

எடுத்தாள்.

"அம்ருதாவா... நல்லபடி வீடு சேர்ந்தியாம்மா?
பட்டேன்... ஒன்னுங் கவலைப்படாத. அங்கத் த
இருக்கறதுக்கு எங்களோட தும்கூர் வரலாமே?"

"யோசிக்கணும் மாமா... இப்ப..."

"அவசரமேயில்ல. போற வழியில அங்க வருவோம். தோணுச்சுன்னா வந்திடு. அக்காவப் பத்தி கவலப்படாத... எல்லாம் நல்லபடிதான் நடக்கும் என்ன?"

"சரி மாமா... தாங்க்ஸ்."

மறுநாள் காலை பெற்றவர்களை வழியனுப்பி விட்டு வர, வீடு வெறிச்சோடிக் கிடந்தது. காபி குடித்துவிட்டு, பிரயாண அவசரத்தில் கலைந்திருந்த வீட்டை நேர் செய்தாள். பிரிந்து கிடந்த செய்தித்தாளை, படித்தபடியே அடுக்கிய போதுதான் அந்த செய்தி கருத்தில் முட்டியது.

'நெல்லை பஸ் நிலையத்தில்-பெண் சாவு.'

நேற்று காலை தான் இருந்தது இதே இடம் என்ற நினைப்பில் கவனமாய் வாசித்தாள்.

'நெல்லை ஜங்ஷன் பஸ் நிலையத்தின் அருகேயிருந்த உணவகத்தில் சாப்பிட்டு விட்டு வெளியே வந்த பெண் மீது கார் மோதியது. அந்த இடத்திலேயே அப்பெண் துடிதுடித்து இறந்தாள்.'

இறந்தவர் பெயர் சாருமதி என்றும், அவர் ஆதிகுளம் என்ற சிற்றூரைச் சேர்ந்த ஆசிரியை என்றும் தெரிய வருகிறது.

அதற்கு மேல் பார்வையும் புத்தியும் ஓடவில்லை!

யார்... இவளுடன் பயணம் செய்த சாரு டீச்சரா இறந்தது?

'மோதிய கார் நிற்காமல் விரைந்து விட்டது என்று பொது மக்கள் தெரிவித்தார்கள். போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.'

நேர்ந்த தனிமையுடன் இந்த செய்தியும் சேர்ந்து அவளை உலுக்கியது. நிழலான மனுஷ வாழ்வு சட்டென்று மறையும் என்பது அவளுக்குத் தெரிந்ததுதான் என்றாலும் இது முகத்தில்



அறைபட்ட அதிர்ச்சி. அக்காவிற்கும், இந்த குடும்பத்திற்க பிறந்த முதல் வாரிசிற்கும் இப்படி ஏதேனும் ஆகிவிடுமோ என அச்சம் வேறு உள்ளே கூடு கட்டியது. ஆனாலும் யாரிட இதபற்றி பேச மனமுமில்லை.

தனக்குள்ளாக சாரு டீச்சரின் மரணத்தைப் புதைத்த சுருண்டு படுத்தாள்.

அவ்வப்போது அண்டை வீட்டு மனிதர்கள் வந்து பார் விட்டு.

"அக்காவுக்கு எந்த ஆபத்துமில்ல அம்ரு- ஏனிப் வெளிறிப் போயிட்ட? டெல்லில எப்பேர்ப்பட்ட ஆஸ்பத் யெல்லாம் இருக்குது... ஒரு வாரம் குழந்தையை அ வச்சிருக்கறது ஒரு பாதுகாப்புத்தான்" என்று ஆறுதல் பேசி

"ஆட்டும் ஆன்ட்டி"

"தமுக்கத்தில ஏதோ கண்காட்சி நடக்குது. சாயங்கால போகலாம்" உடன் போனாள்.

இரண்டாம் நாள் மனம் சற்று நிலைப்பட்ட நேரம் அடுத்த உலக்கல் வந்தது. அதுவும் செய்தித்தாள் மூலம் தான்.

'காலமானார்' என்று கருப்பு சிலுவைக்குறியின் கட்டத்துக்குள் இருந்த வார்த்தைகள் கண்களை ஈர்த்து நிறுத்

இறந்தவரின் பெயர் திருமதி ஜெஸி தேவநாயகம்.

ஊரின் பெயர் ஆதிகுளம்.

வண்டாய் இவ்விரு சொற்களையே பார்வை மொ குடைந்தது. சாரு டீச்சர் இறந்தது அறிந்ததும் மனதுக் மீண்டும் மீண்டுமாய் தங்களுக்கிடையே நடந்த சம்பாஷனை நினைவுபடுத்தியிருந்தாள். ஆக இந்தப் பெயர் அழு பதிவாகியிருந்தது. அடுத்ததாய் இறக்கப் போகும் பெண்

டீச்சர் பாவப்பட்டது ஜெஸியைத்தானே..? தோற்றம், மறைவு தேதிகளின்படி பார்த்தால் நடுத்தர வயதைத் தாண்டியவளும் கூட சின்னஞ்சிறு ஆதிகுளத்தில் ஜெஸி என்று இரு வயதான பெண்கள் இருப்பது சாத்தியமா?

ஆக இறந்தது சாரு டீச்சர் காப்பாற்ற புறப்பட்ட அதே ஜெஸி!

இந்நினைப்பு நிச்சயமானதும் அடுத்த நினைப்பு ஒன்று கோரமாய் பல் காட்டியது... அப்படியானால் சாரு டீச்சரின் மரணமும் இயல்பில்லை. அதாவது விபத்தில்லை... கொலை!

அவளைக் கொலைகாரன் காரில் தொடர்ந்திருக்க வேண்டும்.

அத்தனை சந்தடியில் சாருமதியை இடித்து அடித்து விட்டுப் பறந்த அந்த ஆள் யார்?

டீச்சரின் சந்தேகப்படி-ஆதிகுளத்தில் உள்ள ஒருவர்தான் அது..

அந்த அமைதியான எஸ்டேட்டில் வாழுபவர்களை ஒவ்வொருத்தராய் அழிக்க யார் முனைகிறார்கள்?

'இவர்தான் கொலையாளி' என்ற அறிமுகம் செய்தாலும் யாரும் நம்பக் கூடாத அளவிலான கண்ணியவான்.

பார்வையாலேயே குறி வைக்கும் கொடூரன்... யாரது?

உடனே ஆதிகுளம் போக வேண்டுமென்று பரபரத்தது அவள் மனம்.

இன்னுமொரு காபி கலக்கிக் கொண்டாள்.

அதிர்ச்சியில் உறைந்திருந்த புத்தியை விரட்ட காபி சற்று உதவியது.

இப்படி நினைத்தமாத்திரத்தில் ஆதிகுளம் போய் இறங்கி விட முடியாது என்பதும் புரிந்தது.



வசுவின் கிராமத்தில் தங்கி, அங்கிருந்து அதிக தூரமில் ஆதி குளத்துக்குப் போய் துப்பறியலாம். ஆனால் வசு நா கர்நாடகாவிற்குக் கிளம்புகிறாளே... குடும்பமாய்..?

தவிர ஒண்டியாய் அந்த ஆபத்தான சூழலில் போயிரு வேவு பார்க்குமளவு தனக்கு இந்தக் கொலைகளில் எ சம்பந்தம்? அரைமணி நேரம் சாரு டீச்சருடன் சக பயணி இருந்தது தவிர வேறென்ன ஒட்டுதல்?

நெற்றி நீவியபடி யோசித்தாள்.

நேர்ந்த பயணத்தை முழுக்க தற்செயல் என்று ஒ முடியவில்லை. விதி அல்லது ஆண்டவன் செயல் என் தோன்றியது.

கொலை என்பது வெகு அசாதாரணமானவொரு விஷ அதுபற்றி முன்பின் அறியாதத் தன்னிடம் ஏன் சாரு டீ சொல்ல வேணும்?

தன்னோடு இந்த ரகசியம் அடங்கிவிடக் கூடாது எ முன்னெச்சரிக்கையா?

அல்லது விதியேதானா?

வீட்டில் குறுக்கும் நெடுக்குமாய் கால் ஓயும் வரை நடந்

இல்லை... எனக்கென்ன வந்தது என்று இதை ஒதுக்கி, ம முயலும் பெண்ணில்லை தான்.

ஏதாவது செய்ய வேண்டும். 'சட்'டென டீச்சர் யா சந்திக்கப் போவதாய் சொன்னார்கள் என்பது பொறிய மின்னியது பாளையங்கோட்டையின் பெண் போலீஸ் மன

மணியம்மை, ரமாமணி, மணிமொழி என்பதாய் மு பெயர் இருக்கலாம்.

மணி- பெண் போலீஸ் அதிகாரி,

பாளையங்கோட்டை காவல் நிலையம் என்ற முகவரி தெரிந்தத் தகவல்களைக் கடிதமாய் அனுப்பினால்?

தவறிப் போக வாய்ப்புண்டு.

நேரே போய் விவரமாய் சொல்வது உசிதம்.

தனக்கு போலீஸ் உத்தியோகந்தான் என்று நிர்ணயித்த சாரு டீச்சருக்காய் மணி, ஆதிகுளம் போய் நிச்சயம் தீர விசாரிப்பாள்... அலசி, ஆராய்ந்து மிளகில் கலந்திருக்கும் அந்தக் கள்ள பப்பாளி விதையை பொறுக்கி வீசி விடுவாள்.

இந்த முடிவு அம்ருதாவை நிம்மதியாக்கியது.

ஆக அன்று மாலை வீடு வந்து தங்கிய வசுமதியிடமோ அவள் பெற்றோரிடமோ எதுவும் பேசவில்லை அவள், சொன்னால் ஏம்மா இது வீண் வம்பு என்ற தடை வரும்.

இடையே இருமுறை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட வசுமதி, "என்ன அம்ரு, தனியா இருக்கறதுக்கு எங்ககூட வரலாம்ல?" என்று கெஞ்சியும் இவள் பிடி கொடுக்கவில்லை.

"இல்லப்பா... அப்பாட்டேருந்து எந்த நேரமும் போன் வரலாம். எங்க போனாலும் எந்நினைப்பு வேறெங்கோதான் இருக்கும். சுற்றிலும் பதினொரு குடித்தனம். பயமில்லை. நேத்து கூட நேபர்ஸோட வெளியே போயிட்டு வந்தேன். ஒன்னுங் கவலைப்படாத..."

"அப்ப... வரும் வழியில் மறுபடி பார்ப்போம்."

"உனக்கு பிடிச்ச சாளை வறுவல் தயார் பண்ணிடறேன் பசிக்குதுல்ல?" என்றபடி விலகினாள்.

இரவு உணவு முடிந்ததும் பேசியபடி அமர்ந்தனர். பேச்சை ஆதிகுளத்திற்குக் கொண்டு போய் நிறுத்தினாள் அம்ருதா.

"ஆமா. நம்மூருலேருந்து இருவது நிமிஷப் பயணந்தான்... ஆனா நான் அங்கப் போனது ஒரே தரந்தான். என் ஒன்னு விட்ட அக்கா இருக்கறது அங்கதான். அவங்க பொண்ணு ஆனந்தி



நிச்சயத்தப்பப் போனது. கல்யாணம் பாளையங் கோட்டை
தான். ஆதிகுளம் எஸ்டேட் போலத்தான்... வச்சு தாலிகட்டக்
கோயில் வசதி இல்லாத இடம்..."

"அந்தத் தம்பி அப்ப என்ஜினீயரிங் முடிச்சிருந்தது.
எங்க வேலையாம்?" மாமா விசாரித்தார் தன் மனைவியை

"தெரியலீங்களே. ஊர் திரும்பினதும் அக்காவை ஒரு
போய் பார்த்துட்டு வரணும். ஆனந்திக்குப் பொண் குழந்
பிறந்ததாக்கூட சொல்லி விட்டிருந்தாங்க..."

"அவங்க வீடு எந்தப் பக்கமத்தை?"

"தெரு பேருன்னு ஏதும் அங்கக் கிடையாதும்மா.
அக்கா பேரு சுந்தரி. அத்தாம் பேரு பாலசந்திரன்... இல்ல
அந்தப் பையம் பேரும் ஏதோ நல்ல பேரு... ஆங்.. ஆதவ

"ஊருக்கு பொருத்தமாய் வச்சுட்டாங்க போல..."

"அவங்க பேர் சொல்லி விசாரிச்சுப் போயிட்டேன்.
ஆதவன் தோட்டம்னு வேலி போட்டு அதுக்குள்ளாற அ
வீடு கட்டியிருக்காங்க."

"ஓஹோ?"

அவள் மனம் இந்த விவரங்களைக் கவனமாய் குறி
கொண்டது. ஆனாலும் மறுபுறம் புத்தியின் அதட்டல்.

'யேய்... நீ போகப் போறது பாளையங்கோட்டைக்கு.
மணியைத் தேடி, சந்திச்சு விவரம் சொல்லிட்டு திரு
மட்டுந்தான் உன் வேலை... ஆதிகுளம் போறது ஆபத்து

வெளியே கொட்டு மேளம் சத்தம் கேட்க, வ
குடும்பத்தினர் ஆவலாய் வாசல்புறம் நகர்ந்தனர்.

"சப்பரம் வருதாயிருக்கும். கீழப் போய் பாருங்களே
வீட்டை மூடிட்டு வர்றேன்..."

அவர்கள் படியிறங்க, இங்கே தொலைபேசி அ
டெல்லியிலிருந்து அப்பா பேசினார்.

“அனிதாவும் பேரனும் சௌக்கியம்மா இனி எந்தப் பயமும் இல்லைன்னுட்டாங்க டாக்டர்ஸ். அடுத்த வாரம்... அதிகம் போனா பத்து நாளைக்குள்ள மதுரை வந்துருவேம்மா...”

“சரிப்பா இப்ப வசுமதி குடும்பம் இங்க வந்திருக்காங்க... நாளைக்கு தும்கூர் போறாங்க...”

“போறதுன்னா நீயும் கூடப் போயேம்மா... லீவ் சமயத்துல நீ பாவம் தனியா ஏன் மதுரையில கிடக்கணும்?”

“கூப்பிடறாங்கப்பா... ஆனா... சரிப்பா...”

“வீட்டுச் சாவியை போறதானா எதிர்வீட்டு கோபாலு தாத்தாட்ட கொடுத்திரு...”

“ஆகட்டும்ப்பா...”

வசுமதியுடன் போகப் போவதாய் ஏன் பொய் சொன்னோம் என்பது அவளுக்குப் புரியவில்லை... ஆனாலும் ஏதோவொரு மாய வலையில் சிக்க ஆரம்பித்திருக்கிறோம் என்பது மட்டும் புரிந்தது.




சினிமாவில் வரும் போலீஸ் நிலையம் போலில்லை. அது சின்னதாய் சற்று அழுக்காய் இருந்தது.

“அவங்க மேயர் பாதுகாப்புக்காக கூட போயிருக்காங்க” பென்சிலை உருட்டியபடி பதில் வந்தது.

“எப்ப திரும்புவாங்க?”

“தெரியலை... மேயரின் டூர் முடிஞ்சாத்தான் போலீசும் திரும்பலாம். அதுக்கப்புறம் மீட்டிங்குக்கு பந்தோபஸ்து தரப் போகணும்.”



தமிழ்மணியைத் தேட அதிகம் அலையவில்லை அம்ருத

“களக்காடு பகுதியிலிருந்து வந்த இளம் பெண் ‘மணி என்றதுமே.”

“ஓ தமிழ்மணியா?” என்றார்கள் - டான்டென்று.

ஆனால் இப்போதைக்குத் தமிழ்மணியைச் சந்திக்கதா முடியாது போல.

இவள் சொல்வதைக் கதையாய் கேட்டுவிட் அசுவாரஸ்யமாய் பென்சிலை உருட்டுவார்கள் மற்றவர்களு என்றே தோன்றியது.

இத்தனைத் தூரம் வந்ததற்கு சும்மா போகக்கூடாது என் ஓரளவு ஆதிகுள விவரங்களை எழுதி கவரில் இட்டு தமிழ்மணி வரவும் சேர்ப்பிக்கச் சொல்லிவிட்டுக் கிளம்பினா ஆனால் மதுரை திரும்ப மனதாகவில்லை. கண்ணில் பட் எஸ்.டி.டி. பூத்தினுள் நுழைந்தாள்.

அங்கிருந்தவரிடம் விசாரித்து, டைரக்டரியில் துழா ஆதிகுளம் பாலசந்திரனின் எண்களைத் தேடித் தட்டினாள்.

புத்தி பலக்க அதட்டியது. ‘இதென்ன வேண்டாத வேலை என்று. ஆனால் எதிர்புறம் மணியடித்ததும் உடனடியாய்,

“ஹலோ... ஆதவன் கார்டன்ஸ்” என்று பதில் தந்தது ஒ கம்பீரமான ஆண் குரல்.

இனி பின்வாங்கக் கூடாது.

“நான்... அம்ருதா... களக்காடு பக்கமுள்ள வசுமதியோ சிநேகிதி” என்றவள் வசுவின் பெற்றோர் பெயரைய குறிப்பிட்டாள்.

“ஆமா - எங்க உறவுக்காரங்கதான்...”

“நான் டூர்ஸ் அன்ட் ட்ராவல்ஸ் மாணவி - பயணம். அதுல கிராமங்களில் பயணம்ங்கறது பற்றி ஒரு கட்டுரை எழு வேண்டியிருக்குது. வசுமதி வீட்டார் தும்கூர் போயிட்டாங்

அந்தப் பக்கம் வர வேண்டியிருக்குது... அத்தை உங்களைப் பற்றிச் சொன்னாங்க..." தயங்கினாள்.

"பரவாயில்ல வாங்க... என்னைக்கு வர்றீங்க?"

இயல்பாய் அழைப்பு வந்தது.

"வந்து இப்பப் பாளையங்கோட்டையிலிருந்ததுதான் பேசறேன்."

"அப்ப அரைமணி நேரத்தில களக்காடு வரக்கூடும். நான் மெயின் பஸ் ஸ்டாண்ட்டில வந்து காத்திருக்கேன். நீல மாருதி பின்புறக் கண்ணாடியில் 'ஆதவன்'னு எழுதியிருக்கும்."

விஷயம் இத்தனைச் சுலபமாய் முடியுமென்று நினைக்க வில்லை. இப்படி முடிய வேண்டுமென முழுமனதாய் நினைத்தாளுமில்ல. இப்போது எஸ்டேட்டில் தங்க ஒரு இடம் கிடைத்து விட்டதால் போய் பார்த்தால்தான் என்ன என்ற ஆவல் பிசாசாய் நெட்டித் தள்ளியது.

பெற்றவரிடமேக் கூட மறைத்துவிட்டு இப்படி ஒரு காரியத்தில் இறங்குவது... நல்லதற்கில்லை... ஆபத்துதான்...

ஆனால் ஆர்வ வலை அவளைச் சுற்றி வளைத்தது... ஆதிகுளம் நோக்கி இழுத்து நகர்த்தியது.

"வணக்கம்... அம்ருதாதான?"

தன் முன் நின்றவனை ஆச்சரியமாய் பார்த்தாள்.

தொலைபேசியில் அறிமுகத்திற்காய் ஒரே முறை சொன்ன தன் பெயரைக் கச்சிதமாய் நினைவிலிருந்து ஸ்பஷ்டமாய் உச்சரிக்கிறானே என்ற வியப்பு. பல காலம் பழகியவர்களேக் கூட அவள் பெயரை அமுதா, அமிர்தா என்று அழைக்கக் கேட்டு சலித்தவள் அவள்.

"ஆமா... எப்படி...எப்படி கண்டுபிடிச்சீங்க?"



"இங்க ஒரு பட்டணத்துப் பெண்ணை இனம் காணுற சுலபம்..." புன்னகைத்தான்.

"வணக்கம்...ஸாரி... முதல்லியே சொல்லியிருக்கணும்."

"பரவாயில்லை... எப்ப சொன்னா என்ன... இத்தனை இனிமையாய் சொல்றப்ப?" சிரித்தான்.

கண்ணியமும் கவர்ச்சியுமான சிரிப்பு.

இயல்பாய் இவள் கையிலிருந்த பையை வாங்கி கொண்டான்.

"பரவாயில்ல... நானே..."

"நான் அத்தனை கிராமத்தான் இல்லை."

"என்ன?"

"பெண்ணை பெட்டி சுமக்க வச்சிட்டு கைவீசி நடக்கறள

"ஓ? நீங்க என்ஜினீயர்னு அத்தை... வசுவோட அம் சொன்னாங்க."

"ரைட். பேர் ஆதவன்."

"அதுவுந்தான் நேற்று அவங்கெல்லாம் எங்க வீட்லத தங்கியிருந்தாங்க..."

"ஓஹோ?"

"அப்ப தற்செயலாய் உங்கப்பா அம்மா இங்கிருக்கறத பேச்சு வந்தது. எனக்கும் வித்தியாசமான இடங்களுக் போகத் தேவை இருந்ததால... பயன்படுத்திக்கிட்டேன்... இப் எதிர்பாராத விருந்தாளியா வர்றது தப்புதான். மன்னிக்கணு ஆனா..."

"வேற வழியில்லாம நீங்க எடுத்த முடிவுன்னா எங்களுக்கு அது சந்தோஷமாத்தான். பத்து, இரு

முகங்களையே மறுபடி மறுபடியுமாய் பாக்கறதை விட்டுட்டு புதுசா ஒரு முகம் பார்க்க ஆதிகுளமே ஆர்வமாயிருக்குது..."

காரை செலுத்தலானான்.

"வசுமதியைச் சின்னவளாய் பார்த்தது..."

"இன்னும் சின்னவளாத்தான் இருக்கறா - கிழவியா யிடலை."

சிரித்தான்.

"ஆதிகுளத்தில் முக்கால்வாசி பேர் கிழவன் கிழவிங்கதான்."

"நேத்து கூட ஜெஸிங்கற அம்மா இறந்து போனதாய் பேப்பர்ல பார்த்தேன்...

அவன் முகத்தில் சிரிப்பு மாறியது.

"ஆமா... இன்னைக்கு மூன்றாம் நாள் சாப்பாடுன்னு அப்பா அம்மா அங்கதான் போயிருக்காங்க..."

"உங்களுக்கு ரொம்பப் பழக்கமா?"

"சின்ன இடத்தில ஒருத்தரை ஒருத்தர் பார்த்து பழகிக்கறது தான்."

"அவங்க ரொம்ப காலமா சுகமில்லாம இருந்தாங்க போல..?"

அவளைப் பக்கவாட்டில் பார்த்தவன் முகத்தில் சற்று ஆச்சரிய பாவனை.

"ம்... ஜெஸிம்மா பத்து வருஷமாய் படுக்கையிலதான்... அவங்களை வெளியில பார்த்ததேயில்லை.. உங்களுக்கெப்படி?"

"என் படிப்பு சுற்றுலா, ஊர்கள் பற்றியதுன்னாலும், ஆட்கள் எல்லாம ஊரோ, ஊர் சுற்றுதலோ ஏது?"



"உண்மைதான்."

"ஜெஸிம்மா வீட்டுக்காரர்... என்ன வேலை?"

"மிலிட்டரியில மேஜராய் இருந்து சீக்கிரம் ஓய் வாங்கினவர். ரெண்டு பேருக்குமே பூர்வீகம் இங்கேன்றதா ஒரு தோட்டம் வாங்கிப் போட்டு அமைதியா செட்டிலாயிட்டாங்க..."

"பிள்ளைங்க இல்லையா?"

"இல்லை. காஃபின் அளவு கொடுத்து. புதைக்க இட தேர்ந்தெடுக்கறது வரை அப்பாவும் நானுந்தான் உதவினோ

"அங்க நிறைய கிறிஸ்டியன்ஸா?"

"எல்லோரும் கவலையாய் உண்டு."

"சென்னி... கிறிஸ்டியனா?"

சற்று நேரம் அவனிடமிருந்து பதிலில்லை. முகம் இறுகிய

"இல்லை. அவ இறந்தப்ப நான் இங்கேயில்லை. அம் அதுபற்றி எழுதியிருந்தாங்க..."

ஸ்டியரிங்கில அவன் விரல்கள் இறுகியதை கவனித்தாள். ஆக சென்னியைப் பற்றிய பேச்சு இவனுக் பிடிக்கவில்லை...

ஏன்? அவளது சாவில் இவனுக்கு பங்குண்டோ?

சாரு டீச்சர் சொன்னதின்படி கொலையாளி மி கண்ணியமான, சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட நபர்...

அப்படியானால் ஆதவனுக்கும் சந்தேகப் பட்டியலி இடமுண்டு!

இவன் பார்வையைச் சற்று கவனிக்க வேண்டும்!

இறங்கிய இவளுக்காக கார் கதவைத் திறந்தவன பார்வையைச் சந்தித்தாள். அது அத்தனை சிநேகமாயில்ல...

இவளை வரவேற்ற போது கண் வரை எட்டிப் பிரகாசித்த சிரிப்பு இப்போது காணாமற் போயிருந்தது. வீட்டிற்குள் போனார்கள்.

கிராமம் என்று எதிர்பார்த்து வந்த இடத்தில் இத்தனை வசதியாய் ஒரு அறையை அவள் எதிர்பார்த்திருக்க வில்லை.

"இது எங்கக்கா அறை. அவளுக்காய் பார்த்துக் கட்டினது..." என்றபடி அறையைத் திறந்தவன், அதனுடன் இணைந்திருந்த குளியலறையில் கீஸரை உயிர்ப்பித்து விட்டுப் போனான்.

"உங்கப்பா அம்மா வந்துரட்டுமே... அதுக்கு முன்னே நான் இப்படி தங்கும் உரிமையெடுத்துக்கறது சரியில்லைன்னு தோணுது."

"அவங்களும் சந்தோஷமாய் சம்மதம் சொல்லிட்டுதான் போனாங்க... மதுரையிலேருந்து பயணம் செய்ததால் களைப்பாய் தெரியறீங்க..."

"சரி."

குளித்து தளிர் பச்சையில் மஞ்சள் பூக்கள் தெறித்த சேலைக்கு மாறினாள். ஒரு சின்னப் பெண் தட்டில் நெய் முறுக்கும் சூடாய் காபியும் தந்துவிட்டு,

"ஏதும் வேணும்னா குட்டின்னு கூப்பிடுங்க" என்று வெட்கத்துடன் சொல்லிவிட்டு ஓடியது.

சாப்பிட, வாயும் வயிறும் இதமாயின.

சற்று பொழுதில் ஹாலில் பேச்சுக்குரல் கேட்க, அம்ருதா எழுந்தாள்.

அவர்கள் அழைத்தப் பிறகு போவதுதான் முறை என்றுப் பட, மீண்டும் அமர்ந்தாள். முள் மேல் உட்கார்ந்தது போன்ற



அவஸ்தை. அறியாதவர் வீட்டில் அழையா விருந்தாளி
நிற்பது... இது புது அனுபவம்!

இங்கு இரண்டு நாட்களுக்கு மேல் தங்க முடிய
அதற்குள் இங்கிருப்பவர்களை ஓரளவு நோட்டம் பார்த்துவி
பிறகு மீண்டும் தமிழ்மணியோடு வரலாம்... இங்குள்ள நபர்க
தன் கைவசம் உள்ள விவரத்தின் அடிப்படையில் சந்தித்
ஓரளவு புதிர் விடுபடும் என்ற நம்பிக்கை இருந்தது.

தீவிர சிந்தனையில் இருந்தவள் தன் அறைக் க
தாழிடப்படும் சத்தத்தில் விதிர்த்து எழுந்தாள்.

சாத்திய கதவில் சாய்ந்து நின்றான் ஆதவன்!

"நீங்க... அப்பா, அம்மா வந்தாச்சு போல?"

"நீங்க குளிக்கறீங்கன்னேன் அம்மா உங்களுக்காக வ
வறுக்கறாங்க. அதுக்கு முன்னே எனக்குச் சில சந்தேகா
தீரணும்..."

"ம்ம்..."

இன்னும் சாய்ந்தபடி கீழ்ஸ்தாயியில் அவன் கே
அவளைக் கலக்கியது.

"ஆதிகுளத்துக்கு எதுக்காக வந்திருக்கே? உண்மை
காரணம் வேணும் எனக்கு."

வெலவெலத்து விட்டாள்.

"நான் வசுமதியோட சிநேகிதி. தூரத்து சொந்தங்கூட...

"அப்படின்னா ஜெஸி, சென்னி பற்றியெல்லாம் வி
சொன்னது யாரு? இங்கே இதுவரை ஒருதரம் கூட
வசுவா? இல்ல நிச்சயதார்த்தத்தோட ரெண்டு மணி
வந்துட்டு போன சித்தியா?"

அவளுக்குத் தன் தவறு புரிந்தது.

அவசரக் குடுக்கையாய் சென்னி பற்றி ஜெஸியின் சுகவீனம் பற்றி விசாரித்ததால் வந்த வினை இது!

"எப்படி தெரியும்? எதுக்கு வந்தீங்க... அம்ருதா உங்க பேர் பொய்யில்லையே?"

"இல்லை..."

முணங்கலுடன் கண்ணை மூடி யோசித்தாள்.

வந்ததுமே தன் புளுகு பிடிபட்டு விட்டது.

விவரங்களை இவனிடம் சொல்லுவதுதான் முறை...

ஆனால் ஆதவனே அக்கொலைகாரனாய் இருந்தால்?

உடம்பு நடுங்கியது.

"ஆதவா..." ஒரு பெண்ணின் குரல் கதவருகே அழைக்க, "கட்டில் மேல ஏறு" அதட்டினான் அவன் மிக மெல்ல!

"அ-ஆ...?"

அவள் தோளைத் தொட்டு நகர்த்தி சைகை செய்தான்.

அந்த அவசரத்திற்குக் கட்டுப்பட்டு கட்டிலின் மீது ஏறி நின்றாள்.

கதவைத் திறந்தவன்.

"எலி இருந்தது போலேம்மா அதான் அடிக்க வந்தேன்."

நல்ல சமாளிப்பு வியப்பாய் மனதுக்குள் பழித்தாள்.

"தடி எடுத்துக்கலையாடா?"

"இவங்க குதிச்சதில எலியைக் காணோமே?"

"அடடே... இறங்கும்மா... உனக்கும் எங்க ஆனந்தி போல எலின்னா அலர்ஜியா? வாம்மா... நீ அதுக்குள்ள அறையை ஒரு தரம் நல்லா பாத்திடு ஆதவா?"



கைப்பற்றி இவளை இறக்கிய பெண்மணியிடம் அ
தாய்மையும் கலந்திருந்தன.

அவள் பின்னால் நின்ற பெரியவருக்குமாய் சேர்த்து
குவித்தாள்.

"வணக்கம்... நான் அம்ருதா. மதுரை ஃபென்னர்ல வே
பாக்கற தியாகராஜனோட பொண்ணு. எங்கம்ம
வசுமதியோட அப்பா உறவு..."

மடமடவென்று அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

"ஆதவன் சொன்னாம்மா படிப்பு விஷயமாய் வந்திரு
போல... உரிமையா வந்ததுல சந்தோஷம்மா. எத்தனை
மாசம்னாலும் இரு. முந்தாநாள்தான் ஆதவன் சிங்கப்பூரில
மாசமா ட்ரெயினிங் முடிச்சு வந்தான்... இப்ப நீயும் வந்ததுல
நிறைஞ்சு தோணுது. சாப்பிடலாம் வா."

சாப்பிடுங்கையிலேயே ஆதவனின் தாயார் மே
விவரங்களைச் சொன்னார்கள்.

"ரெண்டாந்தேதியே நாங்க சென்னை போயிட்டே
அங்க இவரு தம்பி வீடு இருக்குது. இருந்து துரையை கூட்
வந்தோம்."

இவளுக்குள் சந்தோஷ மின்னல் ஒன்று கீறியது.

ஆறு மாதங்களாய் ஆதவன் இந்தியாவிலே
இல்லையென்றால் அவன் கொலையில் சம்பந்தப்பட்டி
முடியாது. இவன் பெற்றோரும் சாரு டீச்சரின் விபத்து நே
மூன்றாம் தேதி சென்னையில் இருந்தார்கள். ஆக ஆதவன
விவரம் சொல்லி உதவிக் கேட்கலாம்.

வத்தல் குழம்போடு கோஸ் பொரியலை ருசி
சாப்பிட்டாள். இடையே உடன் சாப்பிட்ட ஆதவ
நோக்கி நிம்மதியான ஒரு குறும்பு சிரிப்பை வீச, அவளு
விக்கியது!



"இதுதான் விஷயம். இதை எவ்வளவு தூரம் உங்ககிட்ட சொல்லலாம்னு தெரியாததால பொய் சொல்ல நேர்ந்தது. அதுவும் முழுக்கப் பொய்யில்லை..."

"துணிச்சல் ஜாஸ்தி... அதுவும் அசட்டுத் துணிச்சல்."

பாதி ஆச்சரியமாகவும் மீதி அதட்டலாயும் சொன்னான்.

"தெரியுது. அப்பாகிட்டயோ, வசுமதி வீட்டார்ட்டயோ சொல்லாம கிளம்பினது ரொம்பத் தப்பு. எனக்கு ஏதும் ஆச்சுன்னா, அவங்களுக்கு எந்த விவரமும் புரியாது."

"உனக்குப் புரிஞ்சா சரி." அவளை மிக இயல்பாக ஒருமையில் அழைத்ததை உணர்ந்தவன் "ஸாரி... இப்ப என்ன செய்யலாம்ங்கறீங்க?" கேட்டான்.

"இங்குள்ளவங்களை எல்லாம் நா சந்திக்கனும்... அப்புறம் என்னை உங்க உறவுக்காரப் பொண்ணா கூட்டிட்டுப் போகப் போறதால சும்மா நீங்க ஒருமையிலேயே கூப்பிட்டுக்கலாம்" அனுமதி தந்தாள்.

"ரைட்... ஆனா எனக்கும் இன்னும் முழு நம்பிக்கை வரலை. எல்லாம் சாரு டீச்சரோட பிரமையோன்னு தோணுது. ஆனா அவங்க சாவும், ஜெஸிம்மாவோட சாவும் அவங்க சொன்னது நிஜம்ங்கறதுக்கு சாட்சி ஆயிடுது... ஸோ... வா கிளம்பலாம்."

"முதல்ல எங்க?"



"கீர்த்தி ஸாரைப் பார்ப்போம். அவர்தான் இங்கப் பெரி
மனுஷர். அவர் மனைவி பத்து பதினைஞ்சு வருஷங்களுக்
முன்னமே இறந்துட்டாங்க... பிள்ளைங்க இல்லை. ஆ
ஊரையே சுவீகாரம் எடுத்தவர் போல பேசுவார்... ஊருச்
நல்லது பண்ணனும் அது இதுன்னு..."

"அவர் மேல உங்களுக்கு சந்தேகம் ஏற்படுதா?"

"எனக்கு இந்தச் சந்தேகக் கண்ணோட்டம் புதுசு."

"ஏன் என்னைக் கட்டில் மேல நிற்க வச்சு விசாரிக்கல
சந்தேகந்தான் அது?"

"ரொம்ப முட்டாள்தனமாய் உளறினா வேறென்ன செய்ற
முறைக்காதம்மா. இப்ப நாங்க ஊரிலே இல்லாததால நா
சந்தேக லிஸ்ட்டில இல்லை. சென்னி இறந்தப்போ அம்
அப்பா இங்க இருந்தாங்கன்னாலும் சுப்பு பய இறந்தப்ப அவ
நார்த் இண்டியா டூர் போயாச்சாம்."

"ரெண்டு நாள்ல எல்லாரையும் சந்திக்க முடிஞ்சா நல்
பிறகு தமிழ்மணியோட ஒரு தரம் வரலாம்னு திட்டம்."

"முழு மூச்சா இறங்கினால் கொலைகாரனை இப்ப
வலையில் அமுக்கிடலாம்."

"கடவுள் துணையிருந்தா வாய்க்கும். இல்ல அநாவசியம
எல்லாரையும் சந்தேகப்படற சங்கடந்தான்."

பெரும்பாலும் பழமரங்கள், செடிகள் என்பத
பெருமூச்செறிந்தாள் குளக்கரை ஒன்றிருந்தது ஆதிகு
வேலிகளில் படர்ந்திருந்த கொடிப்பூக்களும் தன்மைய
காற்றுமாய் ரம்மியமான இடம்.

"இங்கக் குளம் எங்கே?"

"ஓ... காரணப் பெயரான்னு கேட்கறியா? முதல் முத
இந்த மலையில இங்கதான் குளம் வெட்டினாங்களாம். இப்ப

தூர்ந்து போச்சு. ஒவ்வொரு தோட்டத்துக்கும் தனித்தனியா கிணறு உண்டு இப்ப..."

பத்து நிமிட நடையில் கீர்த்திவாசன் வீட்டின் முன் நின்றார்கள். அலங்காரமாய் குரோட்டன்ஸ், ரோஜா என்று அசத்தியது தோட்டம். அவன் பின் நின்ற வீடு பகட்டாய் இருந்தது.

புதுமுகத்தைக் கண்டதும் உற்சாகமாய் உள்ளே ஓடி முதலாளியை அழைத்து வந்தான் வேலைக்காரன்.

அவசரத்தில் வந்த கீர்த்திவாசன் தன் கட்டைக் குட்டையான மேலுடம்பை ஒரு பெரிய டர்க்கி டவலால் போர்த்தியிருந்தார். கீழே பட்டு லுங்கி பளபளத்தது.

அறிமுகம் முடிந்ததும்-

"அந்தத் தூத்துக்குடி மக்ரோன்ஸ் கொண்டு வாடா..." என்று உபசரித்தார்.

"இந்த ஊரிலேதான் முதல் குளம் வெட்டப்பட்டதாக படிச்சிருக்கேன் ஸார். இந்தத் தொன்மையான ஊர், மக்களைப் பற்றிக் கட்டுரை எழுதணுங்கற ஆவல்... நீங்கதான் ஊர்த்தலைவர்னு..."

கதைவிட ஆரம்பித்தாள் அம்ருதா...!

"அப்படியா யாரம்மா சொன்னா?"

"ஆதவனும் சொன்னார்... ஆதிகுளம் வர்றதா முடிவு பண்ணின பிறகு இந்த ஊர் ரெண்டு செய்திங்க கண்ணிலே பட்டது. செய்தித்தாளிலே... ம்ப்ச்... ரொம்ப வருத்தமாயிடுச்சு..."

"ஆமா... ஆமா ஒரே வாரத்துல ரெண்டு சாவு. இந்த எஸ்டேட்டுக்கு அது பெரிய இழப்புதான். புதுத் தலைமுறையில யாரும் இங்கத் தங்கி முழு நேரமாய் தோட்டம் பார்க்கப் போறதில்லை... எனக்கும் வாரிசில்லை... ஆதிகுளத்தோட எதிர்காலம் எப்படியிருக்குமோ?" வருந்தினார்.



"உங்கள மாதிரி பெரியவங்க இருக்க என்ன குறை ஸா பள்ளிக்கூடம் கூட ஆரம்பிக்கப் போறதாய்..."

கன்னம் புடைக்கச் சிரித்தார்.

"அட அதையுஞ் சொல்லிட்டானா? ஊ முன்னேத்தினாத்தான நாலு பேர் வந்து இங்கத் தங்குவாங்க. பழுத்த மரத்துக்குப் பறவைங்க வர்றாப்பல..."

"உண்மைதான். நிறைய வாசிப்பீங்களா ஸார்... லைப்ரரி கூ அமைச்சிருக்கீங்களாமே?"

"ஹிஹி... கிடைச்ச புஸ்தகத்தையெல்லாஞ் சேர்த் பொதுவில வச்சுட்டேன். ஆசையிருக்கறவன் வாசிச் ஆளாகட்டுமே. ஆனா எங்க இப்ப எல்லாரும் பாக்கற டிவிதான்" குரலில் சலிப்பு ஏறியது.

"பெரிய டிஷ் ரெண்டு போட்டிருக்கீங்களே."

"இங்கேருந்துதான் அத்தனை வீட்டுக்கும் கேபிள் போவு எம் புண்ணியத்துல ஊர் முழுக்க பத்திருவது சேன பார்த்துக்கட்டுமே. என்ன இப்ப?"

"பால் சப்ளை கூட இங்கேருந்துதாம் போல."

ஆதவனின் அம்மா மூலம் அறிந்த தகவலையும் அள் விட்டாள். ஆனந்தத்தை அடக்கியபடி தலையாட்டினா கீர்த்திவாசன்.

ஆனால் கண்களில் சின்ன சஞ்சலம் தோன்றியதை இவ கவனித்து விட்டாள்.

"அதுவுந்தாம்மா. நாலு வேலைக்காரங்களைப் போட் மாடுங்களைப் பராமரிக்க வேற யாருக்கு ஆவும்? இந் மலைக்கு எவனும் ஏறிவந்து பாலூத்தவும் மாட்டான். தேவை பட்டதுக்கான ஏற்பாட்டை நாமேத்தான் பாத்துக்கணும்?"

இவரிடம் இறந்தவர்களைப் பற்றி விசாரிப்பது உசிதமில்ல எனப்பட்டது. ஊர் பெரியவரிடம் கதை அளப்பது சரியில்ல

தவிர இவர் மற்றவர்களைப் பற்றிப் பேசும் **ஆர்வமுள்ள** வரில்லை. தான், தன்னைப் பற்றிய பேச்சு என்ற ரக **மனிதர்.**

விடை பெற்று வெளியே வந்ததும் இவளைப் **பார்த்தான்** ஆதவன்.

உதடு பிதுக்கினாள்.

“தற்பெருமைவாதி... ஆனா நாம தேடுறது **கொலையாளி** இல்லையா?”

“ம்ம்... அப்ப நாம பார்க்க வேண்டியது ஒரு பொம்பளையை... ஊரைப் பற்றி அத்தனைக் **கதையையும்** அவுத்துவிட... உனக்கு ஏதேனும் அவல் கிடைக்கும் மெல்ல.”

“முதல்ல, யார் எப்படி இறந்தாங்கன்னு தெரியணுமே.”

“அப்ப சென்னியோட சித்தியைப் பார்ப்போம். வேண்டிய விவரம் வரும்” தொடர்ந்து நடந்தார்கள்.

**கி**ழங்கும் கீரையுமாய் பயிரிட்டிருந்த சரிவில் நின்றது அந்தக் குடிசை.

பளீர் என்ற நைலக்ஸ் சேலை, கில்ட் நகைகளில் குடிசைக்குப் பொருந்தாத சிங்காரிப்பில் இருந்தாள் சென்னியின் சித்தி.

“எங்க... டி.வி.லேருந்து வந்திருக்கீகளா?”

“இல்ல... சும்மாத்தான் இது படிப்பு சம்பந்தப்பட்டது.”

“சும்மான்னா? அப்ப காசு கிடையாதா?”

“நாந்தர்றேன். அவங்க நம்ப விருந்தாளி கேக்கறதுக்கு பதில் சொல்லுங்க.”

குறுக்கிட்டான் ஆதவன்.

கயிற்றுக் கட்டிலை, இவர்களுக்காய் இழுத்துப் போட்டு விட்டு, ஒரு மனைப்பலகையில் உட்கார்ந்தாள் அப்பெண்.



அம்ருதாவின் குறிப்பறிந்து தோட்டத்தைச் சுற்றி பார்க் பாவனையில் விலகினான் ஆதவன்.

“சென்னி... உங்கக்கா பொண்ணா? கேள்விபட்டேன்.”

“ஆமா... அவ அப்பனுக்கு நானு இளைய தாரமுந்த குடியில கடனு சாஸ்தியாகி ஊர விட்டே ஓடிட்டான். நா இவளும் ஒத்தருக்கொருத்தர் ஆதரவா இருந்தோம்.”

“எப்ப இறந்து போனா?”

“அது... அதாச்சு... ஐஞ்சாறு மாசம்.”

“ஏதும் வயத்த வலி, நோவுன்னு சொல்லுமா?”

“இல்லியே... கிடாக்குட்டி மாதிரில்ல துள்ளிகிட்டு திரி

“அப்புறம் ஏன் விஷம் குடிக்கணும்? அப்படி சொல்றாங்க?”

“அதான தெரியல...” கள்ளக் குரலாய் புலம்பலு தயாரானவளை அடக்கினாள்.

“மெள்ளப் பேசுங்க. என்ன விஷம்?”

“பாத்தா விஷங்குடிச்சு ஜீவன் போனாப்பல இருக்குன் டாக்டர். வீட்டுல எந்த விஷமுங் கிடையாது.”

“ஏன்னாவது உங்களுக்குத் தெரிஞ்சிருக்கணு கெட்டிக்காரங்களாத் தோணறீங்க. உங்க புத்திக்கு ஏதே பட்டிருக்கணுமே.”

திருதிருவென்று விழித்தவளிடம்,

“ஏதும் காதலா?” கிசுகிசுத்தான்.

“அந்த ரங்க பய விவகாரமாத்தானிருக்கும்.”

“ரங்கன் யாரு?” கூர்மையாய் கவனித்தாள்.

“கேபிளு கனெக்ஷன் கொடுத்துட்டு மாசா மாசம் நூறு ரூவாய பிடுங்கிட்டுப் போவானே... அந்தப் பயதான்

"கீர்த்தி ஸார் வீட்டிலேருந்துதான..?"

"அவரு கிண்ணம் மாதிரி கூரையில போட்டது தாம் டி.வி பாக்க. இவம் போய் அதிலேருந்து எல்லாருக்கும் கனெக்ஷன் குடுத்துபிட்டான்."

"ஸார் சம்மதத்தோடத்தான?"

"முதல்ல சரின்னவரு பிறகு இவம் ஒவ்வொரு வீட்டிலேயும் பணம் புடுங்கி குஷி பண்றதப் பார்த்ததும் தனக்கும் அதுல பங்குண்டுன்னு சத்தம் போட்டாரு போல..?"

"ஓகோ? ரங்கன் தரலை?"

"தராததோடு, இம்புட்டு இருக்க இன்னும் என் எங்கிட்டேருந்து பிடுங்கணும்னு கத்தினானாம்-ரப்புப் பய..."

"இதெல்லாம் உங்களுக்கு யார் சொன்னது?"

"சுப்புப் பயதான்."

"அவனும் பாவம்..."

"சுப்பு செத்து மூணு மாசமிருக்கும்... லைப்ரரின்னு ஒரு பழங்கட்டடம் இருக்குதே-அது உள்ளார வெளிவெல்லாம் ஒட்டரை அடிக்கப் பேசி வுட்டிருப்பாங்க போல..."

"யாரு?"

"கீர்த்தி ஐயாதான். அவன் தவறி விழுந்து செத்துட்டான்."

"சரி-இப்ப சென்னி விஷயத்துக்கு வருவோம்-ரங்கந்தான் காரணம்ங்கறீங்க- அவ மனசு ஒடிஞ்சு தற்கொலை செய்து கிட்டாளா... இல்ல விவகாரமாகி... யாரேனும் அவளைக் கொலை பண்ணிட்டாங்களா?"

"அதான் தெரியலியே -

அம்மான் மக ஏம் போன்...னா...?

செத்தும் புரியலிலே



சிறுக்கி மவ ஏம் போன்...னா?

பாட்டாய் புலம்பல் நீண்டது. சித்திக்கும்தா வெளங்கலியே..."

அம்ருதா காத்திருந்தாள்-

கசியாதக் கண்களைத் துடைத்தபடி.

"அந்த ரங்கம்பய கையில துட்டு பிரண்டதும் பெ கொம்பாத்தேட நினைச்சுட்டாம்- நாவர்கோயிலு பக்க பொண்ணு அமைஞ்தாப் பேசிக்கிறாங்க. ஒரு ஒட்டு வீடும் க மாலையுமா வருவாளாம்- கேக்க எனக்கே 'பக்' குன்னா... எ எம்மவ உசிர விட்டுற மாட்டா?"

"நிச்சயமாத் தெரியுமா?"

"ஆ... ஒரு உத்தேசமாத்தான் சொல்ல முடியும்-வாய் வி அவ ஏதுஞ் சொல்லலியே... உள்ளேயக் குமைஞ்மதாலத்த தலைய வலிக்குதுன்னு புகாரு சொன்னா... சாகறதுக்கு முந் நாளு கூட டாக்டர்ட்ட போயி ஏதோ மருந்து வாங்கிட்டா..."

ஒரு பெருமூச்சுடன் விடை பெற்றாள் அம்ருதா.




"இத்தனை நேரம் எனக்கிது தோணலை பாருங் அம்ருதா கிரீச்சிட ஆவலாய் நிமிர்ந்தான் ஆதவன்-

"சொல்லு-என்ன?"

இங்கே மூணு கொலைகளையும் செய்த ஆளுதா நமக்குத் தெரிஞ்சு மூணு..ம்ம்..? தன் குட்டு வெளிவராம இரு அதே ஆள்தான் சாரு டீச்சரையும் கொன்னது - ஆக இ

ஏப்ரல் மூணாம் தேதி காலை பத்தரை மணிக்கு நெல்லை ஜங்ஷன்ல அவர் இருந்திருக்கணும் அதாவது அப்ப அவர் ஆதி குளத்திலே இல்லை."

"ரைட்!"

இருவரும் பண்டிகைக்கு முன்பே லட்டு சம்புடத்தைக் கண்டு பிடித்துவிட்டக் குழந்தைகள் போல கெட்டிக்காரக் குதூகலத்துடன் பரஸ்பரம் பார்த்துக் கொண்டனர்.

"நம்ப விசாரணையில் இதையும் சேத்துக்கலாம் - அதாவது, ஏப்ரல் மூணாம் தேதி காலை நீங்க எங்க இருந்தீங்க?"

"இத்தனை வெளிப்படையா கேக்க முடியாது - அதுக்கு நமக்கு உரிமை இல்லியே?"

"ஆனா துணியணும் - தவிர அந்த ஆளுக்குக் கார் ஓட்டவும் தெரிஞ்சிருக்கணும் இல்லியா?"

"ஆமா - அப்படின்னா கண்டிப்பா கொலையாளி ஒரு பெண் இல்லை - ஆதிகுளத்தில் காரோட்டும் காரிகையர் இல்லை."

பேசியபடி அவர்கள் வந்து நின்றது டாக்டரின் வீட்டின் முன்பு. சின்னத் தாழ்வாரம் நெடுக விநோதமான செடிகள் பல தொட்டிகளில் வளர்ந்திருந்தன-

"மூலிகையா?"

"டாக்டர் ஏதோ ஆராய்ச்சி நடத்துவார் - சர்க்கரை வியாதிக்கு, மலடு நீங்க, குஷ்டத்துக்கு தீர்வுன்னு ஏதேதோ சொல்வார்."

அழைப்பு மணி சத்தம் கேட்ட சில நொடிகளில் கதவு திறந்தது.

"வாப்பா ஆதவன் - சிங்கப்பூர் பயணமெல்லாம் எப்படி?"



குசலம். அறிமுகங்கள் முடிந்ததும் மெல்ல கேள்வி - ப
பகுதிக்குள் இறங்கினர்.

"சாகறத்துக்கு முன்னே கூட சென்னி உங்ககிட்ட ம
மருந்து வாங்கிட்டாளேமே டாக்டர்?"

டாக்டர் புன்னகைத்தார்-

சாளேஸ்வர கண்ணாடி வழியே அவர் கண்கள் ஆ
முழி போல வீங்கி உருண்டன.

"அதாவது அவ சாவுக்குக் காரணம் என் தலை
மருந்துங்கறியாம்மா?"

"இல்லையில்லை டாக்டர். அந்நேரம் உங்ககிட்டே
பேசினாளான்ற ஆர்வம்தான்..."

"சென்னியுடைய பேச்சு முழுக்க சினிமா பத்திதா
அன்னைக்கும் ஏதோ விஜயகாந்த் படம் பத்தி பேசினா..."

"தற்கொலை செய்துக்கற அளவு விரக்தியான பேச்சில
அது.."

"ஆனா டாக்டர்... விஷங்குடிச்சு தற்கொலை
யிருக்கணும்னு சொன்ன நீங்க... ஏன் ஆடாப்ஸி செய்யலை

"பிரேத பரிசோதனை செய்றளவு எங்கிட்ட உபகரண
ஆள் ஒத்தாசையோ கிடையாது. சாதாரண வெட்டுக்க
ளைக்கவே எவ்விரல் நடுங்குது - நெடுக உடம்பைக் கி
தைக்கறதாவது - ஆனாலும் சென்னி வீட்டாரிட்ட சொன்
உடம்பை அரசாங்க ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போ
முறைப்படி அவ இறந்த காரணத்தைத் தெரிஞ்சுக்கோங்க
'ஓ'ன்னு ஒப்பாரி வச்சதுங்க - அதுக்கு மேல
வற்புறுத்தலை."

"அவ... சென்னி கர்ப்பமாய் இருந்திருக்கக் கூடுமா?" 
அம்ருதாவின் முகம் சற்று சிவந்தது.

"தெரியலேம்மா."

"நாடி பிடிச்சுப் பார்த்தப்ப அனுமானிக்க முடியலியா?"

"நீயும் தமிழ் சினிமாவை முழுசாய் நம்பற ஜீவன் போல... நாடிப் பிடிச்சு கர்ப்பம். அதுவும் இத்தனை மாசம்னு சொல்லக் கூடும்னா, யூரின் டெஸ்ட், மற்றதெல்லாம் எதுக்கு?"

"ஜெஸிம்மா இறந்ததும் கூட எதிர் பாராதது இல்லையா?"

டாக்டர் யோசனையில் தலையாட்டினார்.

"ஜெஸி நோயாளிதான் - உடம்பு தேறி வர்றாப்பல இருக்கும் மறுபடி நரம்புங்க விறைச்சுக்கிடும்... என்னென்னு புரியலை."

"அப்புறமும் நீங்க பிரேத பரிசோதனை செய்யச் சொல்லலையா?"

"அசாதாரண இறப்புக்குத்தான் அது அவசியம். ஒரு வேளை மேஜர் மனைவியை எந்த நோய் இத்தனை வருடமாய் பாடு படுத்தினதுன்னு தெரிஞ்சுக்க ஆசைப்பட்டிருந்தார்னா செய்ய அரசு ஹாஸ்பிடலுக்குப் போயிருக்கலாம் - செய்யலை."

"சுப்பு இறந்தது - அது கொலைன்னு நினைக்கறீங்களா?"

"அவன் மோசமான சுட்டி - இழுத்து காதை முறுக்கித் தலையிலே ஒரு குட்டு வைக்கணும்னு தோணுமேத் தவிர... மேலேருந்து தள்ளிக் கொலை செய்யறளவு... ஐ டோன்ட் நோ... யாருக்கும் அத்தனை குரூர மனமில்லைன்னு நம்புவோமே."

"இந்த மூணாம் தேதி உங்களுக்கு நெல்லையில ஏதும் மீட்டிங் இருந்துதா டாக்டர்?" அப்பாவியாய் கேட்டான் ஆதவன்.

நெற்றியை நீவியவர், "ம்ம்..? அன்னைக்குப் பக்கத்து கிராமத்துக்குப் போயிருந்தேன் - ஒரு பிரசவ கேஸ்...மூணு மணி நேரப் போராட்டம்... ஆனா தாயும் குழந்தையும் நலந்தான்" புன்னகைத்தார்.



"உங்க மகன்ங்க இந்த வருஷம் இந்தியா வர்றாங்க டாக்டர்?"

பேச்சை மாற்றி சுமுகமாக்கினான்.

"அவனுங்களுக்குக் காசு கண்ட இடம் சொர்க்கம் - இ தூசி, குப்பை, நாத்தம்னுறாங்க. பேரப் பிள்ளைகளு ஒட்ட மாட்டேங்குதுங்க. அவ இருந்தப்போ சலிச் கிட்டாவது வந்தவனுங்க இப்ப நினைச்சா போன் பேசறதே சரி."

"சிங்கப்பூர் பார்த்தபிறகு எனக்குமே எப்ப நம்ப நாடு அ நிலைக்கு உயருங்கற ஆதங்கந்தான்..."

"அது தப்பில்லை - இல்லையேங்கற வெறுப்பு தப்பு. இ உள்ள இளசுங்களுக்கு அந்த ஏன் அந்த உணர்வுமில்ல சானல் மாத்தி மாத்தி பாத்தபடி காலம் கழிக்குதுங்க. வாழ்ற விரயம் அதுகளுக்கு எடுத்துச் சொல்லி யாரேனும் திரு வாங்கற நம்பிக்கை கூட எனக்கில்லை."

ஆகக் கழிசடைகளைக் கழித்து ஊரைச் சுத்திகரிக்கிறா டாக்டர்? இளையவர்கள் இருவரும் ஒரே சந்தேகத்து யோசித்தனர்.

"உங்களை மாதிரி உருப்படியான இளைஞர்களைப் பா ஆறுதலா இருக்குப்பா... காட் பிளஸ் யூ."

புத்திர சோகம் மகாக் கொடியது என்பது அந்த ஏ தாயின் கண்களிலேயே தெரிந்தது. கண்ணீர் வற்றி உல விழிகள்.

அந்த எளியவள்.

'நீங்க யாரு - எதுக்கு எம்மகன் சுப்புவைப் ப கேட்கணும்' என்ற பேச்சேயின்றி கண்ணீரும் துக்கமு கொட்டித் தீர்த்தாள்.

"அஞ்சு பெத்தேம்மா - மூணு தீப்பெட்டி லேபிளு ஒட்டுதுங்க அவங்க பெரியம்மை வீட்டிலிருந்து மூத்தவனுக்குப் பட்டறை வேலை - இவந்தான்... இந்த சுப்புரத்தினந்தான் கடைசி பிள்ளை... கூடவே கிடந்தவம்மா...பூனைக்குட்டி கணக்கா எங்காலைச் சுத்தி சுத்தி வருவானேம்மா..." விசும்பினாள்.

"நீங்க வேலை பாக்கறீங்களாம்மா?"

"சத்துணவு மையத்துல ஆயாவா இருக்கேனுங்க- பக்கத்து கிராமத்துக்கு தினம் போயிட்டு வரணும். 'நா வளந்து சம்பாரிச்சதும் உன்னை தினம் ஸ்கூட்டருல ஏத்திட்டுப் போய் விடுவேன். கூட்டியாருவே'ம்பானே எந்தங்கம் - உக்காந்து வச்சு சோறு போடுவேம்மான்னு சொல்ற விவரம் போதாது... ஆனா பாசமுள்ள புள்ள. சதா திரிஞ்சுட்டு கறுத்துட்டான். எனக்குப் புறந்ததுங்கள்ல அவந்தான சிவப்பு. அவன் நடிச்சுக் காட்டறத பாத்தா வுட மாட்டீங்க - பட்டணத்துல இருந்தா ஸ்டாரு ஆயிருப்பான்.. யாரைன்னாலும் அச்சு அசவா அவங்களப் போலவே பேசி, நடந்து காமிச்சிருவான் - குரலுதான் கொஞ்சம் கீச்சுங்கும்.. சிறுபய இல்லை.?"

ஒரு வேளைத் தன்னைப் போல நடித்துக் காட்டியதுதான் கொலையாளிக்கு வெறியேற்றிவிட்டது?

அத்தாயை வேறு கேள்விகளுடன் குடைய மனமில்லை.

"இப்படிப் பேசி மாஞ்சு பாரத்தத் தீக்க நினைக்கறேம்பா... முடியலியே தங்கப் பய கண்ணுக்குள்ளேயே ஆடுதாம்..."

"ஏதாவது ஒரு பிள்ளையாவது வரவழைச்சு உங்கக்கூட வச்சுக்கோங்க. அதுதான் கொஞ்சமேனும் ஆறுதலாயிருக்கும் வரட்டா?"

"இனி என்னால முடியாது ஆதவன்.. நாலு பேர சந்திச்சுப் பேசுனதில... அவங்களோட எண்ணமோ



குமுறலையோ நம்பகிட்ட கொட்டிட்டாங்க... எனக்கு அ... தாக்கத் தெம்பில்லை."

"தெம்பை விடு - ஏதும் சந்தேகம் கிளம்புச்சா?"

"மஞ்சள் காமாலைக்காரன் கண்ணு போல, இப்ப யா... பார்த்தாலும் சந்தேகந்தான் - கொஞ்சம் போனா, நா... கொலையைச் செய்ய எனக்கு என்னென்ன மோட்டிவ்... அலச ஆரம்பிச்சுடுவேன்!"

சலித்தாள்

சாப்பிட்டபின், ஆதவன் தாயாருடன் பெ... விஷயங்களைப் பேசி வீட்டு வேலைகளில் சற்று உதவி... அம்ருதாவின் இறுக்கத்தைத் தளர்த்தியது.

"வேற யாரையெல்லாம் நா சந்திக்கணும்னு நினைக்க... ஆதவன்?"

"மேஜர் - அதாவது ஜெஸிம்மாவோட கணவர் - அப்... நாயர்."

"நாயர்னா டீக்கடை நடத்தறாரா?"

"அவன் அப்பா முதல்ல அப்படித்தான் இ... வியாபாரத்தை ஆரம்பிச்சாராம். அப்புறம் ஜூனியர் ந... அதையே ஒரு மெஸ் போல விரிவாக்கிட்டான் - கூட... பலசரக்கு, துணிமணின்னு எல்லாம் வாங்கி விக்கிறதுண்டு..."

"அப்படின்னா ஆதிகுளத்தின் ஒரு முக்கிய நபர்தான்..."

"ம்ம... ஆனா அவனைப் பற்றி ஊரில் நல்ல அபிப்ர... கிடையாது. அப்பப்போ கேரளாவிலேருந்து அ... உறவுக்காரங்க வர, அமர்க்களமாய் ஏதோ பூஜை, பலி... சேர்ந்து நடத்துவாங்க. நாயரும் சதா மாந்திரீகம், ஏவல், குறி... பேசுவான். ஆக நம்ம ஆட்களுக்குக் கொஞ்சம் கிலி... ஒதுங்கிருவாங்க. 'கொலைன்னா' நாயரா இருக்குமோன்னு...

முதல் சந்தேகம் தோணும் இங்குள்ளவர்களுக்கு... இன்னைக்குச் சீக்கிரமாய் இருட்டுது. நாயரை மட்டுமாய் பார்த்துட்டு வந்துடலாம்..''

அம்ருதா ஏதோ யோசனையாய் தலையசைத்தாள்.

''ஏன் வேண்டாங்கறே?''

''போக வேணாங்கலை, அப்ப பெரும்பாலும் நாயர் கொலையாளி இல்லைனு படுது. ஏன்னா சாரு டீச்சர் சென்னதின் படி யாரும் சந்தேகப்படாத ஒரு நபர்தான் கொலையாளி?''

''ஆனா நாயர்ட்ட ஒரு பழைய அம்பாஸிடர் உண்டு. முதல்ல அவன் இந்த மூணாம் தேதி எங்கே இருந்தான்றதைப் பார்த்துடுவோமே ..''

அம்ருதா புன்னகைத்தாள்

''இப்போ உங்களுக்கே கொலையாளியை கண்டு பிடிக்கணும்ங்கற ஆர்வம் வந்திடுச்சி - இல்லையா?''

''ஏதோ ஒரு காரியத்தில் இறங்கிட்டா அதை முடிச்சாதானே நிம்மதி?''

''போலீஸ் ஸ்டேஷன் போய், சாரு டீச்சரை ஜங்ஷனிலே மோதினது எந்தக் கார்... கலர் என்னன்னு விசாரிச்சாக்கூட நமக்கு அது பெரிய உதவி... ஆதாரம்...''

''ரைட் விசாரிச்சுச் சொல்றேன். இப்ப நாயர்...?''

''கிளம்பலாம்.''

அவர்கள் நாயரின் கடைக்கு முன் போய் நின்ற போது சட்டென்று இருட்ட ஆரம்பித்திருந்தது - ஏனோ அந்த வாசற்படி மிதித்த போது அம்ருதாவின் பிடரியில் குறுகுறுத்தது.






இளைஞன்தான்

ஆனால் இளமையின் துடிப்பு, சிரிப்பு ஏதுமில் இவர்களைக் கூர்ந்து பார்த்தபடி அமர்ந்திருந்த நாயரி இவளால் அதிகம் பேச முடியவில்லை.

அந்த செவ்வரிக் கண்கள் இவளைக் கலக்கின.

லேசான மலையாள சாயலடித்த தெளிவான தமிழ்த பேசினான்.

''இங்க நாயர் கடை மட்டுன்னதால போய் பார்க்கணும் என் கஸின் அதான் வந்தோம்..'' ஆதவன் பேச்சை ஆரம்பி வைத்தான்.

கடைக்குள் வீசிய மட்டரக ஊதுபத்தியின் மண இவளுக்குக் குமட்டியது. அதைப்பொறுத்தபடி பொருட்கை பார்வையிடுவது போல சுற்றி வந்தாள்.

வினோதமும் சற்று விகாரமுமான சிலைகள் மாலை குங்குமமுமாய் இவளை முறைத்தன.

''மேக்கப் சாமான் கூட வச்சிருக்கீங்க.?''

''இளவட்டங்களை கொண்டு தன்னே வியாபாரம்?''

''மெஸ்சுக்கு.. நிறைய பேர் வர்றதுண்டா?''

''இல்லா- மீல்ஸ் ஓர்டர் இருந்தா மட்டும் சமைப்பே இல்லங்கில் டிபன்தான். பூரி வடை நிறைய போகும். அதை

சென்ட், பவுடர் நல்ல சேல்ஸ் - இந்த பர்ஃப்யூம் ப்ரான்ஸிலேர்ந்து தருவிச்சதாக்கும்.''

கடத்தியதைத்தான் நாசூக்காய் தருவித்தது என்று சொல்கிறானாயிருக்கும் என்று நினைத்துக் கொண்டாள். பொருட்களை விற்பதற்காக பேசுவான் போல... சேல்ஸ் டாக்!

"சென்ட் தீர்ந்த பிறகும் ஈ கிறிஸ்டல் பாட்டிலை ஷோவாய் வீட்டில வச்சிருக்காம்...''

கண்ணாடியில் அன்னாசிப் பழம் போல வடிவமைக்கப்பட்ட அப்பாட்டிலைத் தடவிப் பார்த்தாள் - பச்சையும் தங்கமுமாய் இலை வடிவ மூடியுடன் அது கவர்ச்சியாகவே இருந்தது.

"என்ன விலை?''

"ஐநூறு ரூபாய். நீங்கள் முதல் முறையா நம்பக் கடைக்கு வந்திருக்கறதால ஈ விலை - மத்தவங்களுக்கு எழுநூற்றைம்பது.''

"இதையெல்லாம் நீங்களே போய் வாங்கி வருவீங்களா.?''

"அடிக்கடி போகணும் அப்பத்தன்னே புதுசரக்கு கிட்டும்...''

"இந்த மூணாம் தேதி நெல்லை போனியா நாயர்?''

ஆதவன் இயல்பாய் குறுக்கிட்டான்.

"ஆ... நினைப்பில்லா - எந்தா விஷயம்?''

"பிரமாதமான சேல்ஸ் ஒன்னு நடந்ததாம் விலை சகாயம்னு பேசிகிட்டாங்க.''

"ஓ? யோஜித்தா நா... அப்ப இங்கயில்லா - பட்சே திருநெல்வேலிக்கும் போகயில்லா.''

"காரிலேயே போயிடுவீங்களா?''

"அதையும் அப்பப்ப ஓட்டினாத்தானே பாட்டரி சார்ஜ் ஆகும்.''



இவளைப் பார்த்து நாயர் பேச இவளுக்கு மறுபடி ட
குறுகுறுத்தது. அவன் சிவப்பு கண்கள் தன்னைக் கூறுபோடு
போல ஒரு அசௌகர்ய உணர்வு.

பேசும் போது அவன் கைகளை சதா ஆட்டினான். அ
மிக மெல்லிய, வெளுப்பான விரல்கள். சுண்டு விரலில் நீள
வளர்த்து ரத்த நிற பாலிஷ் பூசப்பட்டிருந்தது. மணிக்க
வெள்ளி பிரேஸ்லெட் சலசலக்க, விரல்களில் வி
திணுசுகளில் மோதிரங்கள்.

இவர்கள் கிளம்ப,

"சென்ட் வாங்கலையா...? நல்ல சரக்கு...'' என்றான் மறு

"அத்தனைக்குப் பணம் எடுத்துட்டு வரலை...'' ம
மறுத்தாள்

பேச வாயெடுத்த ஆதவனைக் கண்களால் அடக்கி

"ஓ.. இவிட ஆயிரம் ரூபாய்க்கும் சாமான் உண்டே.''

"அத்தனைக் கொடுத்து இங்கே வாங்குவார்களா?''

"இல்லாம வாங்கி வைப்போமா? செத்து போன செ
கூட 'ரெவ்வான்' பவுடர் தான் சொல்லி விட்டா..
வேலைக்காரி பூசற பவுடரா அது?''

சிரித்தான்.

சிங்கப்பற்கள் இரண்டும் சற்று கோரமாய் நீண்டிருந்த

"என்ன நினைக்கறே அம்ருதா?''

திரும்பி நடக்கையில் கேட்டான் ஆதவன் கார் போ
வசதியற்ற மண்பாதைகள்தான் என்பதால் எங்கும் நடந்து
வேண்டியது இருந்தாலும், நினைப்பதை அசைபோட
ஏற்ற சமயங்களாய் இருந்தன.

"எனக்கும் நாயரைப் பிடிக்கலை... நேரான ஆள் இல்லைங்கற மாதிரி ஒரு எண்ணம் - மூணாந் தேதி வெளியூர் போனதையும் ஒத்துக்கறான்."

"சென்னி இங்கே உயர்ரக பவுடரெல்லாம் வாங்குவான்னா காசு கொடுத்திருப்பாளா என்ன..?"

"பின்னே?"

என்றவன் அவள் முகம் சிவப்பது கண்டு புரிந்தவனாய்

"தெரியில பெண் விஷயத்திலே நாயர் எப்படின்னு விசாரிக்கலாம். உனக்கு அந்த சென்ட் பிடிச்சிருந்ததா?"

"எதுவும் வாங்கற மனநிலை நான் இல்லை ஆதவன்."

"ம்ம்... புரியுது."

பரிமாறிய அம்மா அவர்களது அன்றைய சந்திப்புகளைக் கேட்டு விட்டு, "நாயர் கடையையும் விடலையாக்கும்? எனக்கென்னவோ அங்க போயிட்டு வந்தா குளிக்கணும்னு வரும் ஏதோ மட்டரக வாசனை... ஏனோ தப்பான இடமாத் தோணும்."

"ஏம்மா, நாயர் ஒழுக்கமான ஆளுதானா?"

"நா ரொம்ப லோக்கல் விஷயங்களைக் காதிலேயே வாங்கிக்கறதில்லைன்னாலும் அரசல் புரசலாய் விவரம் விழுமே. கேரளாக் கூட்டமொன்னு அடிக்கடி வந்து இங்கே ஏதோ பூஜைன்னு அமர்க்களம் பண்ணுமாம் - ஊருக்கு ஒரே கடைங்கறதால பொண்ணுங்க அடிக்கடி அங்கப் போக.. அவனும் நைச்சியம் பண்ற பேர்வழிதாம் போல..."

"நாளைக்கு மேஜரைப் பார்க்கலாமான்ற யோசனை - அவர் மனைவி இறந்த சமயம். இப்படி பேட்டி மாதிரி போனா தப்பாய் படுமோ?

தன் புலம்பலை கேட்க யார் கிடைப்பான்னு தவிக்கறாரு மனுஷன் - ஜெஸியைப் புதைக்கற நேரம் என்னா அலறலங்கற...



பரிதாபமா இருந்துச்சு. நோயாளின்னாலும் இத்தனைக் கால கூடவே இருந்த ஜீவனில்லையா?"

"அவரேத்தான் கவனுச்சுகிட்டாரா?"

"வீட்டோட ஒரு நர்ஸைப் போட்டிருந்தார். அவ நேத் மூட்டையக் கட்டிட்டு கிளம்பியாச்சு. வீட்டு வேலைக்காய் இங் இருக்கற அத்தனைக் குட்டிகளும் அங்கே... அதான் ஜெஸிட் வேலை பார்த்து ஒத்துவராம கிளம்பிடுங்க..."

"அப்போ... சென்னி கூட மேஜர் வீட்டில வேலை பார்த்தாளா?"

"ம்ம் சேர்ந்து ரெண்டு மாசங்கூட ஆயிருக்காது. ஒ யூடிகொலான் பாட்டிலைக் காணோம்னு ஜெஸி ஆர்ப்பாட்ட செய்துட்டா - காய்ச்சல் வந்தா அதில துணியை நனைச் நெத்தியில போட்டுக்கறதுக்காக வச்சிருந்ததாம். அந் வாசனையில மயங்கி சென்னி எடுத்துட்டாப் போல... திருட்டு பட்டத்தோட வேலையும் போச்சு."

"ஓ... அப்புறம் சுப்புவோட அம்மாவைப் பார்த்தே பரிதாபமாய் இருந்தது-ஏணியிலேறி மாடி ஜன்னலை துடைச்சவன் விழுந்து செத்துட்டாம்போல... அ விபத்துதானா?"

"ஏம்மா அப்படி ஒரு சந்தேகம்? அச்சமயம் நாங்க ஊரி இல்லை... காலைல முத வேலையா விசாலத்தைப் போய்ப் பா - இந்த ஊரை விட்டு அசையாத ஜீவன் அவதான். அத்தனை பேர் ஜாதகமும் கணிச்சு வச்சிருப்பா..."

விசாலம் பெயரைப் போலில்லாமல் சித்து உடம்புட இருந்தாள் ஐம்பது வயதிருக்கும்.

அதிகம் நரைக்காத கூந்தல் பின்னப்பட்டு கொண்டையா முடியப்பட்டிருந்தது. சற்று சப்பை முகம் என்றாலும் பார்வை வெகு கூர்மை.

தன்னைச்சுற்றி என்ன நடக்கிறது என்பதை அறிந்து வைத்திருக்கும் தீட்சண்யம் முகத்தில் பளபளத்தது.

"கேள்விபட்டேன் ஆதவா, உன் வீட்டுக்கு விருந்தாளி வந்திருக்கிறதாய்."

"ஒரே நாள்ல உங்களை சேதி எட்டியிருச்சா? இவளுக்கு மக்கள் அவர்கள் மனோபாவம் பற்றி ஒரு ஆய்வுக் கட்டுரை எழுத வேண்டியது இருக்காம்... அதனால இத்தனை தூரம்..."

"வரட்டும், ஒரு தியேட்டரோ, மார்க்கெட்டோ இல்லாத ஊர் மக்களையும்தான் பார்க்கட்டுமே..."

"நேத்து சிலரை சந்திச்சேன் - சாகக் கொடுத்த குடும்பத்தைப் பார்த்தது மனசுக்குக் கஷ்டமா இருந்துச்சு... பாவம் இளசுங்க..."

விசாலம் புன்னகைத்தார்.

"சாவு வயசு பார்த்து வர்றதில்லயேம்மா? நான் இங்க ஒண்டிக்கட்டையா காத்திட்டிருக்கேன். என்னைக் கூப்பிட அதுக்கு மனசில்லை..." ஒரு சோகப் புன்னகையுடன் சலித்தார்.

"உங்கக் குடும்பம்?"

"எங்கத் தாத்தா ரொம்பச் செயலானவரு - இந்த ஆதிகுளம் மொத்தமாய் அவர் சொத்துதான் - அத்தைமாரைக் கல்யாணம் செய்து வைக்க, கொஞ்சமாய் நிலத்தைக் கூறு போட்டு விக்க ஆரம்பிச்சது எங்கப்பா காலத்துக்குப் பிறகு மிஞ்சினது இந்த ஓட்டு வீடும் காணி நிலமுந்தான்."

அம்ருதா வீட்டின் ஜன்னல் பக்கமாய் இருந்த தையல் இயந்திரத்தைப் பார்த்தாள் அதன் அருகிலிருந்த இரு நாற்காலிகளில் விதவிதமாய் புதுத் துணிகள் இறைந்து கிடந்தன.

"நிறைய தைப்பீங்க போல."



"அதான் என் பிழைப்பு, பொழுதுபோக்கு ரெண்டுமே. பக்கத்து கிராமத்திலேருந்தும் எங்கிட்ட தைக்கத் தருவாங்க."

"உங்களோட இங்க?"

"யாருமில்லை. சாருமதின்னு ஒரு டீச்சர் பக்கத்து வீட்டி இருந்தா... இப்ப..."

"தெரியும்... கேள்விப்பட்டேன்."

"கூடப் பிறந்தவங்க நாலு பேர். எல்லாரும் வெவ்வே ஊரில பிள்ளை குட்டிகளோட இருக்கறாங்க. எனக்குக் கல்யா வயசு வந்த போது ஏதேதோ தடங்கல்கள்... இப்படித் தனியாள தங்கிட்டேன்... அம்ருதா... முதமுதலாய் வந்திருக்கே... இரு மதியம் சாப்பிட்டுதான் போகணும்."

"இல்லம்மா... நன்றி... ஆனா நாங்க இப்ப மேஜர் ஸ வீட்டுக்கும் போறதாய் ப்ளான்..."

"ஜெஸி இருந்தவரை வாரத்துக்கு ஒரு தரம் போ அவளோட உக்காந்து பேசிட்டு வருவேன். படுக்கையி கிடந்தாலும் ஜெஸிக்கு வீட்ல நடக்கறது அத்தனையும் தெரியு வேலைக்கார குட்டிங்க கண்ல விரலை விட்டு ஆட்டிருவா"

"இறந்த சென்னி அங்கேயும் இருந்தாப் போல...?"

"சதா மினுக்கற அந்தக் குட்டியோட வேலையோ கையும் சுத்தமில்லைன்னு வேலையை விட்டு அனுப்பிட் ஜெஸி."

"சென்னி ஏன் தற்கொலை செய்துகிட்டானு... உங்களுக அது பற்றி ஏதும் தெரியுமாம்மா?"

விசாலத்தின் முகம் சற்று இறுகியது .

புதிதாய் வந்தவளிடம் ஆதிகுளத்தின் விவகாரங்க எத்தனைத் தூரம் சொல்வது என்பது போன்ற ஒரு தயக்கம்.

"அந்த குட்டி மொத்தத்தில சரியில்லை... ரங்கன், நாயர்... ஏன் மேஜர்ட்ட கூட விழுந்து விழுந்து பழகுவா... பெரியவர். அதான் கீர்த்தி சார்ட்ட கூட பல்லைக் காட்டி வாங்கிக் கட்டிகிட்டவ. ஆளு கொஞ்சம் பாக்கறபடி இருந்தா அதுங்களுக்கு என்ன பண்றோங்கறதேப் புரியறதில்லை."

நிஜமான வருத்தத்துடன் தலையாட்டிப் பேசினார் விசாலம்.

"அதனால...?"

"வம்பை விலைக் கொடுத்தாப்பல ஆச்சுல்ல. சாகற வயசா? சாருமதியை சென்னிக்கு அதிகப் பழக்கம். டீச்சர் டீச்சர்னுட்டு அவகிட்டதான் காசு தந்து சேமிச்சு வைப்பா. கடைசியில அது அவ காரியத்துக்குத்தான் ஆச்சு... இப்ப சாருவும் போயாச்சு..."

"நா... நான் சாரு டீச்சரைப் பார்த்திருக்கேன்."

ஆச்சரியமானார் விசாலம்.

"ஒருவேளை களக்காடு ஸ்கூல்ல படிச்சியோ...?" யோசனையுடன் கேட்டார்.

"இல்லை... பஸ்சில சந்திச்சு கொஞ்சம் பேசிட்டோம்... அவங்க சாவு எனக்கும் கூட அதிர்ச்சிதான்... அது நடந்த இந்த மூணாந்தேதி நீங்க இங்கதான் இருந்தீங்களா?"

"இல்ல... வெளியூர் போயிருந்தேன். நைட்டி தைக்க துணி வாங்க வேண்டியிருந்தது. மொத்தமாய் துணியெடுத்து தைச்சு வைச்சேன்னா அது மடமடன்னு வித்திடுது. இப்ப எல்லா வயசுப் பொண்ணுகளும் அதைத்தான் போட்டுக்கறது..."

"ம்ம்... வசதியான உடைதான் அது..."

"ஏன் ஆன்ட்டி நீங்க கார் ஓட்டுவீங்களா?"

"ஏம்ப்பா ஆதவா? வீட்டில கார் இருந்தா ஓட்டலாம். எனக்கெப்படி சைக்கிள் கூட விடத் தெரியாது."



பேச்சு சற்று பொது விஷயங்களுக்குச் சுற்றிய பின் அம்ருதா கேட்டாள்.

"முன்னே சுப்பு இங்க வர்றதுண்டா?"

"அந்த வாலுப் பய வராத வீடு எது? பாலு ஊத்தறேன்னு சுத்துவான். சாகறதுக்கு ரெண்டு நாளு முன்னக் கூட மேஜர் வீட்டில ஒரு மீன் தொட்டியை உடைச்சு, வாங்கிக் கட்டிட்டான் நிறைய உபத்திரவமும், அப்பப்ப உதவியும் செய்வான்."

"ம்ம்... வரோம்மா."

"மேஜர் வீட்டுக்குத்தானே போறீங்க? மனுஷன் புலம்பித் தள்ளிடுவாரு... இத்தனையையும் ஜெஸி இருக்கறப்ப யோசிச்சிருக்கணும்."

"அப்படீன்னா அம்மா இருந்தப்ப... அவங்களிடையே அதாவது தம்பதிகளிடையே ஏதும் சச்சரவு இருந்துச்சா?"

பிறர் சமாச்சாரத்தில் இத்தனை மூக்கு நீட்டுவது அநாகரீகம் என்று தெரிந்ததும் அம்ருதா இந்தக் கேள்வியை கேட்க நேர்ந்தது. முடிந்தவரை விவரங்களைச் சேர்ப்பது உதவுமே.

"தம்பதிங்கன்னா சண்டை வராதிருக்குமாம்மா? சிலசமயம் எனக்குக் கல்யாணம் நடக்காதது நான் செய்த புண்ணியம்னு கூட நினைச்சுக்குவேன்.

'பொறியில் எலி.

தூண்டிலில் மீன்.

தாலியில் அவள்'னு வாசிச்ச புதுக்கவிதை உண்மைதான் நினைப்பு" நிறைய வாசிக்கும் பெண்மணி போலும் என் நினைப்புடன் பேச்சைத் தொடர்ந்தாள் அம்ருதா.

"ஜெஸிம்மா உடம்பு தேறி வரும்... திடீர்னு மறுபடி முடங்கி வாங்கன்னார் டாக்டர் தாமஸ்."

"எதுவும் நம்ப கையிலஇல்லைன்னுதான் நா சொல்ல முடியும்."

மெல்லிசாய் பெருமூச்செறிந்தார் விசாலம்.

"விசாலம்மா சொல்றதைப் பார்த்தா மேஜர் மேல சந்தேகம் வருதுல்லியா ஆதவன்?"

"அதென்ன மனுஷரைப் பாக்கறதுக்கு முன்னயே சந்தேகம்?"

"சென்னி மேஜர்ட்ட நெருங்கிப் பழகியிருக்கா... சுப்பு சாகறதுக்கு ரெண்டு நாள் முன்னே அவர் வீட்டில் எதையோ உடைச்சு திட்டு வாங்கியிருக்கான். பத்து வருஷம் சீக்காளியான மனைவி... அவங்க இறந்தா அவருக்குக் கிடைக்கக் கூடிய பணம். சில லட்சங்கள் வரும்னு உங்கப்பா உங்கம்மாட்ட பேசினதைக் கேட்டேன்."

"அப்ப சாரு டீச்சர்?"

"கொலையாளி யாருங்கறதை மோப்பம் பிடிச்சு, அதைப் போலீஸ்ட்ட சொல்லக் கிளம்பிட்டாங்களே?"

"அப்ப மேஜர்ட்ட கேட்க வேண்டிய முதல் கேள்வி, மூணாந்தேதி நீங்க திருநெல்வேலி போனீங்களாங்கறதுதான் இல்லியா?"

"எடுத்ததும் இப்படிக் கேட்டா மனுஷன் சுதாரிச்சுடுவார். என்னைக் கேட்டா நீங்க வாயே திறக்காம இருக்கறது நல்லதும்பேன். விசாலம்மாட்ட போய் நீங்கக் கார் ஓட்டுவீங்களான்னதும் எனக்குத் தலைல அடிச்சுக்கலாம்னு தோணுச்சு..."

"யார் தலையில?" கண்சிமிட்டினான்.

"ஷ்ஷு... நா மறுபடி விசாலம்மாவைப் பார்க்கத் தனியா வரணும்."

"ஏதும் தைக்கணுமா?"



"ம்ம்...? உங்க வாயைத்தான்..." சிரித்தாள். மர்மத்தைச் சேர்ந்து முடிச்சவிழ்க்கும் மும்முரம் இருவரிடையே அந்நியோன்னியத்தை விரைவில் ஏற்படுத்தியிருந்தது.

"தனியே பேச்சுக் கொடுத்தா இன்னும் நிறைய சொல்வாங்கன்னு படுது."

பின்னால் அரவம் கேட்க திரும்பினார்கள்.

குடையும், இடது கையில் சிறு கூடையுமாய் வந்து கொண்டிருந்தது விசாலம்தான்.

"அடடே... இப்ப உங்களைப் பற்றிதான் பேசறானாம் அதாவது மறுபடி உங்களைப் பார்க்கணும்னு."

"வாயேம்மா - சாயங்காலம் நாலு மணி போல வா. இப்ப லைப்ரரிக்குப் போயிட்டிருக்கேன்."

"ஓ...? அங்கேதானா?"

"ம்ம் சுப்பு விழுந்து இறந்ததிலிருந்து அங்கே ஈயாட தில்லை. சும்மாவே அங்க யாரும் வந்துப் படிக்கறதில்லை... இப் சுத்தம்."

"நீங்க புத்தகம் எடுக்கப் போறீங்களா?"

"லைப்ரரியை எம் பொறுப்பிலதான் விட்டிருக்கார் கீர்த் சார். காலைல ரெண்டு மணி நேரம் திறந்து வச்சிட்டு பிற மூடிடறது. இப்ப யாரும் வரலைங்கறதாலதான் எங்களை மதி சாப்பாட்டுக்கு அழைச்சேன்..."

"ஓ.. அப்படீன்னா சுப்புவோட விபத்து சமயம்...?"

"நான் அங்கதாம்மா இருந்தேன். ஆனா அவன் வேலை பார்த்திட்டிருந்த கட்டிடத்தோட மறுபக்கத்துல... அவன் விழுந் சத்தம் கூட எனக்குக் கேட்கலை... அந்தப் பக்கமாய் வந் நாயர்தான் "பயல முதல்ல பார்த்தது..."

"ஓ...?"



மேஜரின் வரவேற்பறையில் அவர் வரக் காத்திருந்த ஆதவனும் அம்ருதாவும் சுற்றிலும் பார்வையோட்டினர்.

பெரிதாக்கப்பட்ட ஜெஸியின் புகைப்படம் புதுமாலையுடன் அம்சமாய் இருந்தாலும் படத்திலிருந்த ஜெஸியின் முகத்தில் அம்சமில்லை.

சிறு புன்னகையும் அற்ற 'கடுகடு' முகம்.

சற்றே நெருங்கிய புருவங்களும் சுணங்கிய நெற்றியுமாய்.. காட்டமான தோற்றம்.

"இவங்களைப் பார்த்திருப்பீங்கல்ல?"

"சமீப காலமாய் இல்லை..அவங்க படுத்த படுக்கையான பிறகு அவங்க அறைக்குப் போய் பார்க்க நேரலை.. அந்தளவு நெருக்கமுமில்லை..."

"இதுவரை... பலரைச் சந்திச்சும் எந்தத் தெளிவும் ஏற்படலையே ஆதவன்.. சின்ன இடங்கறதால எல்லாருக்கும் ஒருத்தருக்கொருத்தர் ஏதோ ஒரு துவேஷம்.. எரிச்சல்.. ஆனா அதைக் கொலை செய்து பழி தீர்த்துக்கற அளவு கொண்டு போனது யார்னுதான் புரியலை..."

"ஷ்."

ஆதவன் எழ. இவளும் எழுந்தாள்.

மேஜர் மலர்ச்சியில்லாமல் வந்து அறிமுகங்கள் முடிந்ததும் அமர்ந்தார். கச்சிதமான உடம்பு என்றாலும் முகம் தொய்ந்திருந்தது.



"நான் ஆதிகுளம் வர்றதா நினைச்ச சம
ஜெஸிம்மாவோட மரண அறிவிப்பு பேப்பரில் வந்த
கவனிச்சேன்... அப்பவே அவசியம் உங்க
சந்திக்கணும்னும் முடிவு பண்ணிட்டேன் ஸார்?"

"நல்லதும்மா... அவ போனது அவளுக்கு நல்லது.
தான் சொச்ச நாளு தனியே கிடந்து தவிக்கணும்னு ஆ
போச்சு."

"வேற பெரிய ஊருக்கு அழைச்சிட்டுப் பே
அவங்களுக்கு வைத்தியம் பார்த்திருந்தா.. ஒரு வேளை..."

"வர மாட்டானுட்டாளே... 'என் வீட்டை விட்டு
மாட்டேன்'னு அழும்பு பண்ற ரகம் அவ. ரெண்டு குறை பிரச
கூட இங்கேதான் ஆச்சு. டாக்டர் தாமஸ் ஒரு நர்ஸோட இங்
வந்து பார்த்தார். அந்தக் குழந்தைகளைக் கூட பின்
தோட்டத்திலதான் புதைச்சோம். எங்குழந்தைங்க இரு
மண்ணை விட்டு நான் எங்கேப் போகணும்னு அர்த்தமில்
அடம்பிடிச்சா."

மூக்கை உறிஞ்சிக் கொண்டார்.

"பொம்பளைங்க சென்டிமெண்ட்ஸ் இப்படித்
அர்த்தமில்லாததாய் இருக்கும் ஸார்..."

என்று ஆரம்பித்த ஆதவனை ரகசியமாய் முறைத்
அம்ருதா. மனைவியை அண்மையில் பறிகொடுத்தவரி
சென்னி, சுப்பு பற்றிக் கேட்பதா வேண்டாமா என்ற குழ
வேறு அவளுக்குள்.

"அம்மாவ இந்த நிலைமையிலே விட்டுட்டு
எங்கேயும் கிளம்பவும் முடியாதில்லையா ஸார்?"

இப்போது கண்களாலேயே ஒரு 'சபாஷ்' போட்டாள் இ

"மனசிருக்காது ஆதவா. ஆனா அவளுக்க
மருந்துகளை நானே போய் வாங்கிட்டு வந்தாத்
நிம்மதியாயிருக்கும். போன வாரங்கூட ஜங்ஷன் போய்
மாசத்துக்கான மருந்துகளை வாங்கினேன்..."

"எப்ப ஸார்... மூணாந்தேதியா? நாங்கூட அப்ப அங்கதான் இருந்தேன்... அதான்..."

ஆர்வமாய் குறுக்கிட்டாள்.

"தேதி நினைப்பில்லம்மா... வாங்கிட்டு வந்த மருந்துகளை அவளே அழகா அடுக்கி வச்சா... வந்து பாக்கறீங்களா?"

மீண்டும் மூக்குறிஞ்சினார்.

"பரவால்ல ஸார்... இருக்கட்டும்."

"அத்தனை சகிப்புத்தன்மை ஒரு மனுஷிக்கு இருந்தது அதிசயந்தான் எத்தனை வருஷம்... எத்தனை வலி... ஒரு டவையும் முணகியோ, அழுதோ, சலிச்சோ நாம் ாத்ததில்லையே தம்பி. வேலைக்கார குட்டிகளை ஏவி ீட்டையும் நறுவிசாய் வச்சுக்குவா."

"ம்ம்... அம்மா சொன்னாங்க வேலைக்கார சென்னியை ஜஸிம்மாவுக்குப் பிடிக்கலைன்னு..."

"சே... வேலைக்கா வந்தா அவ? சிலுப்பட்டை... எதை டிக்கலாம் சுருட்டலாம்னு வந்தக் கழுதை... கையும் களவுமாய் டிச்சப்பவே சுட்டுருக்கணும்... பீடை எதையோ முழுங்கித் தாலைஞ்சது..."

"நீங்க இனி இங்கதானா ஸார்... இல்ல வேற்றூர் போகத் ட்டமுண்டா?"

"ஜெஸியும் நானும் இதே ஊர் ஆசாமிங்க... ஆனாலும் சில நரம் இந்த வாழ்க்கை அலுத்திடுது... யோசிக்கணும்."

"விசாலம்மாவும் தனியாள்தான். ஆனா தையல், லப்ரரின்னு சுறுசுறுப்பாய் சமாளிச்சுடறாங்க."

மேஜர் முதல் முறையாக சிரித்தார்.

"அவ கதை வேறம்மா - அவ இங்க இருக்கறது த்திக்காக!"



"அப்படின்னா..?"

புதுத் திருப்பம் உணர்ந்து நிமிர்ந்து உட்கார்ந்தார்க இளையவர்கள்.

"எஸ்டேட்டில் சேந்து வளந்தவுங்கதானம்மா? நாங் எல்லாரும் அந்தக் காலத்துல உங்களைப் போல இளமையா இருந்தோம்... விசாலத்தோட குடும்பம் வசதியானது. கீர்த்தி அப் துண்டு துக்கடா வேலை செஞ்சுட்டு அலைஞ்சவன். இவளுக் அவம் மேல நோக்கமாயிடுச்சு... ஆனா விசாலத்தோ அப்பா இந்தக் கல்யாணத்துக்கு சம்மதிக்கலை. இவளு வீம்பு பிடிக்க, வேறேதும் வரன் அமையாமலேயே கா கடந்திடுச்சு... விசாலம் அப்பா வைத்திய செலவுக்கு நிறை செலவானதுல... அப்புறம் கல்யாண பேச்சை எடுப்பாருமில்லை படிப்படியாகீர்த்திவாசன் நிலை உயர, அவனும் ஒரு வசதியா பொண்ணாய் தேடி கட்டிக்கிட்டு அவ மூலமாய் வ சீர் பணத்திலே மேலும் நிலம் வாங்கி சொத்தைப் பெ கிட்டான்... ஆனா இந்த மண்ணு ராசியோ என்னவோ அவ வீட்டுக்காரிக்கும் குழந்தை தரிசுத்தேத் தவிர தங்கலை..."

"ஓ...?"

இளையவர்கள் சற்று பிரமிப்போடு கதை கேட் கொண்டனர்!

"ஆனா கீர்த்தி நல்லவந்தான். பழைய தோஸ்துன் என்னை மறக்காம பால் 'உத்தறானே...'"

வேசாக புன்னகைத்தார்.

"என்ன சொல்றீங்க?"

"எனக்கு மட்டும் அவன் வீட்டுப் பால் ஃப்ரீ - வாங்கவே மாட்டான். அதிலேயும் சீம்பால் வர்றப்போ இனி ஏலஞ் சேர்த்து கெட்டியாய் காய்ச்சி, சூடு ஆறுறதுக்கு எனக்கிங்க வந்திரும். ஜெஸிதான் பிகு பண்ணிக்குவா... நம ஏனிந்த ஓசிப் பாலு... அது இதுன்னு. ஆனா நான் கீர்த்தி மன சங்கடப்படுத்தவும் முடியாதுல்ல...?"

"விசாலம்மா வீட்டுக்கும் பால்..."

"அவளோடதான் வெட்டிகிட்டானே - அப்பப்ப சீம்பால் அனுப்பலாம்னா, அவளுக்கு இனிப்பு பிடிக்காது..." மறுபடி சிரித்தார்.

அம்ருதா சீக்கிரமாய் சுதாரித்து விட்டாள்.

"ஓஹோ? ஆனா அவருக்காகத்தான் அதாவது கீர்த்தி சாருக்காகத்தான் இன்னும் விசாலம்மா ஆதிகுளத்திலே இருக்காங்கன்னா... அதை நம்ப முடியலையே..."

"ஒரு வயசுக்கு மேல ஊரை மாத்திக்கறது சிரமம்... பேர் மாதிரி அதுவும் பழகிடும். அதுவும் ஒண்டிப் பொம்பளைக்கு அது வேரைப் பிடுங்கிட்டுப் போக மரம் முயற்சி பண்றது போலேன்னு வை."

"கீர்த்தி ஸார் மனைவி இறந்து ரொம்ப வருஷமாச்சே... அதுக்குப் பிறகாவது இவங்க ரெண்டு பேரும் கல்யாணம் செய்திருக்கலாம்..." நாடி பிடித்துப் பார்த்தார்கள்.

"கீர்த்தி பிடியே கொடுக்கலை. விசாலத்தோட அப்பா முதல்ல தடுத்தாலும் அவர் நோயில படுத்த பிறகு நயமாய் பேசி கல்யாணத்துக்கு சம்மதம் வாங்கியிருக்கலாம்... ஆனா ஏனோ கீர்த்தி அத்தனை சிரத்தை எடுத்துக்கலை. வெட்டிட்டு போனாப்பல போயிட்டானாம். அப்ப நா மிலிட்டரியில சேர்ந்தாச்சு - ஜெஸி சொல்லித்தான் இதெல்லாம் தெரியும்."

ஊடும் பாவுமாய் பிணைந்த சமூகம் இது என்பது புரிய, ஒருவித பிரமிப்புடன் விடை பெற்றார்கள் இளையவர்கள்.

"எனக்கேத் தெரியாது அம்ருதா... எங்க எஸ்டேட்டில எத்தனை தினுசு தினுசான கதைங்க இருக்கறது அதிலும் காதல் கதைகள்?"

"கதைகளை விட நிஜங்கள் அதிசயமானவைங்கறது உண்மை."



"மேஜர், சென்னி, சுப்பு பற்றியெல்லாம் எரிச்சலாத்தா பேசினார் கவனிச்சியா?"

"டாக்டர் தாமஸ் கூடத்தான் அப்படி பேசினார். அது ஒ நிரந்தர பிரச்சனை ஆதவன்..."

"எது?"

"சிறுசுகளைப் பற்றி பெரியவங்க புகார் படிக்கறது... ஒன் சொல்றேன் கவனியுங்க..."

"நம்ம இளைஞர்கள் அனாவசியமாகப் பே பொருட்களை விரும்புகிறார்கள் - பண்பாடு இல்லை. மேலிட மற்றும் பெரியவர்களிடம் மரியாதை கிடையாது. ம மட்டமானவர்கள்..."

"யாரிப்படி பேசினது உங்கப்பாவா?"

"ஷ்... ரெண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னால சாக்ரடீ இளையத் தலைமுறைப் பற்றி சொன்ன குற்றச்சாட்டு அது...!"

சிரித்தான் - பிறகு நாடக பாணியில் அறிவித்தான்-

"சரி... இப்ப ரங்கனோடு ஒரு சந்திப்பு" - என்று.

'அதென்ன' என்பதாய் பார்த்தாள்.

"ரங்கன்தான் சென்னியோட நெருங்கிப் பழகியவன்... இ கேபிள் கனெக்ஷன்லாம் கொடுத்த... பயல்."

"ஆங்... நினைவிருக்குது. ஆனா எத்தனை பேரைத்தா பார்க்கறது. தலை வெடிக்கறாப்பல கணக்குது."

"இப்பப் புரியுதா போலீஸ்காரன் கஷ்டம்? சுளுவா சீக்கிரம் கண்டுபிடிக்கலையேங்கறோம். இது போல நா கேஸ்ல அலைஞ்சாலே இருக்கற மூளையெல்லாம் வெ உருகிடும்."

"ஆனா சூட்டோடு சூடாய் முடிக்கறது நல்லது... இன்னு எத்தனைப் பேரை நாம சந்திக்கணும்?"

சற்று பயத்துடன் கேட்டாள்.

"ரங்கன்தான் கடைசி."

"அப்ப போலாம்... ஒரு சுற்று வந்தாச்சுன்னா தெளிவாய் யோசிக்கலாம்."

ஆனால் ரங்கனைப் பிடிப்பது எளிதாயில்லை.

ஒருவழியாய் பிடித்தபோது.

"நாய் பிழைப்பு சார். மாசா மாசம் நூறு ரூபா பிடுங்க வந்திருவான்ராங்க... ஆனா ஒரு சேனல் லேசா மங்குச்சுன்னாக் கூட நோண்டிடுவாங்க என்னை... நாயர் கடையில ஓசி டி.வி. பாக்கற கூலி பயலுங்க 'டி.என்.டி.' சரியா வரலைன்னு சுத்த, நானும் பதிலுக்கு எகிறுனேன். "இங்கிலீஷ் படம் எதுக்குடா உங்களுக்கு என்ன எழவு புரியும்னு" எலிசபெத் டெய்லர் படம் வந்துதாம் - அவனுங்க பாத்தானுங்களாம் எப்படியிருக்கு? சரி பண்ணிட்டு வர்றேன் அதான் நேரமாயிடுச்சு..."

அவன் பிரச்சனைகளுக்கு காது கொடுத்து, நாயர் கடையின் வடை, டீ தந்து ஆசுவாசப்படுத்தி, ஒதுக்கி கூட்டிப் போன பிறகும் ரங்கன் அதிகம் பேசியது கீர்த்திவாசனைப் பற்றிதான்.

"புதுப்பணக்காரந்தான் சார்? அதுக்குண்டான குணந்தான இருக்கும்? முறையா கேட்டுதான் அவரு டிஷ்லேருந்து கனெக்ஷன் போட்டேன். உங்களுக்கு எவ்வளவு சார் தரணும்னு கேட்டப்ப 'அதெல்லாம் ஒன்னும் வேணாம்டா உம் பிழைப்புக்கு ஏதோ வழி'ன்னார் பெருந்தோரணையா. இது ஏறக்குறைய காடு சார்... இதுல கேபிள் கனெக்ஷன் லேசில்லை. குடுத்த வீடுகள்லருந்து மாசா மாசம் காசு வாங்கறது அதவிட கஷ்டம். அத்தனையும் செஞ்சு ஒரளவு நிமுந்தா... பாதிப் பணத்தை எனக்குத் தாங்கறாரு - பாதி வேலையச் செய்வாரா மனுஷன்?"



"டிஷ் அவருதுதானேங்கற?"

"வேணாம்னுட்டேன் சார்..." கைகளை தட்டி கும்பிட்டா
"லோனு வாங்கி சொந்தமாப் போட ஏற்பாடாயிருச்சு."

தலைமுடியை அலட்சியமாய் கோதியபடி பீற்றினான்.

"வசதியான இடத்துப் பொண்ணு பாத்திருக்கறதா
கேள்விபட்டோம். சீர் பணத்திலேயே போட்டுரலாமே?"

"எவஞ் சொன்னதும்மா? பொறாமப் பிடிச்ச பயலு
வாளியில கிடக்கற நண்டாட்டம் அடுத்தத ஏற விட
ராஸ்கோலுக..."

"இல்ல... சென்னிய நீங்க கல்யாணம் செய்துக்காதது ப
பேச்சு வந்தப்ப யாரோ சொன்னாங்க..."

"பாத்தீங்களா- நீங்க ஊருக்குப் புதுசு... வந்ததும் சென்
யாரு அவளை நான் ஏன் கல்யாணம் பண்ணிக்கலைங்
அளவுக்கு உங்ககிட்ட விளக்கியாச்சு..."

"நான் மனித உறவுகள் பத்தி படிக்கறேன். அது சம்பந்தம
நான் கேட்டதுனால சொன்னாங்க... ஆனா நீங்க
சென்னியைக் கல்யாணம் செய்துக்கலைங்கறதெல்ல
எனக்கேதும் தெரியாது."

தூண்டிலை வீசி விட்டு காது தீட்டிக் காத்திருந்தாள்.

"எங்கிட்ட பழகின மாதிரிதான நாயர்கிட்டயும் இழைஞ்
கழுத? அதான் சுதாரிச்சுகிட்டேன். நாயரும் தனக்
கண்ணனூரில கன்னிப் பொண்ணு காத்திருக்குன்னுட்ட
அதான் விஷத்த குடிச்சுட்டா போல..."

கடைசியாய் பேச, அவன் குரல் தழைத்து கரகரத்தது.

"எனக்கு இப்பப் பார்த்திருக்கற பொண்ணு அழகில்
ஆனா கொஞ்சம் வசதியுண்டு. பணந்தானுங்க மெயில
பிறவு மத்ததெல்லாம் தானா வரும்..." தத்துவம் பே
சொன்னான்.

"அழகு, அன்பு, அறிவெல்லாம் கூடவா?"

கேட்டவளை சற்று அச்சத்துடன் பார்த்தான் ரங்கன்.

"என்ன இது ஆதவன்? இவம் இப்படி பணம் பணம்னு பறக்கறான்..?"

"ஆனா சுப்பு, சென்னியைக் கொல்றதால அவனுக்கு ஏதும் பணம் வராதே."

"சென்னியோடுள்ள தொடர்பு சுப்பு பயலுக்குத் தெரிய... ரெண்டு பேரையும் கொன்னுட்டானோ..? அப்பத்தான் பணக்கார பொண்ணு வர வழி கிடைக்கும்?"

"டீக்கடையிலே ரங்கனோட ஏதோ தனியாப் பேசனீங்களே என்ன?"

"ஆங்... மூணாந்தேதி எங்கேயிருந்தேப்பான்னேன்-"

பய நழுவறான்... அதான் நாய் பிழைப்புன்னேனே சார்... எங்க, எப்ப இருக்கேன்னு எனக்கேத் தெரியலைன்றான்..."

"கார் ஓட்டத் தெரியுமா அவனுக்கு?"

"வசதியான பொண்ணு, சொந்தத்துல டிஷ் எல்லாம் அமையவும், அடுத்தது வாகன ராசிதான்னு பய அதையும் கத்துகிட்டானாம்!"

"அப்படியே சாரு டீச்சரைக் கொன்னாலும் ஜெஸிம்மாவை ஏன் அவன் கொல்லணும்? ம்ஹூம்... ஒட்டலை."

"அதுக்கும் ஒரு கதை இருக்கே...?"

"என்ன - எப்போ சொன்னான்?"

"இப்ப இல்ல. எங்க வீட்டில கேபிளுக்கான பணம் வாங்க முன்ன வந்தப்ப அப்பாட்ட மேஜரைப் பற்றி புகார் சொன்னானாம். ஐநூறு ரூபா அதிகம் தந்துடறேன். பலான



படமெல்லாம் வர்ற மாதிரி சேனல் இருக்குதாம்மே. அவ தேடி பிடிச்சுத் தான்னாராம்...!"

"யாரு மேஜரா?" விழிகளை விரித்தாள்.

"இந்த விஷயத்தில ஐயா மைனர் போல... அப்பா ரங்கன், 'இப்படி ஏதேனும் போட்டா, எம்பேர் ரிப்பேர் ஆ முதலுக்கே மோசமாயிடுமே'ன்னு புலம்பியிருக்கான். மேஜர் கொஞ்சம் காரசாரமாவே கத்தியிருப்பான் போல..."

"ஆனா அதுக்கு ஜெஸியை ஏன்..?"

"இப்ப மேஜர் புலம்பறாருல்ல? பாம்பை அடிச்சு பழி தீர் முடியலைன்னாலும் பல்லையாவது பிடுங்கிறலாம் நினைச்சிருப்பானோ?"

அலுப்பும் குழப்புமாய் ஒருவரை ஒருவர் பார்த்த நின்றனர்.




"எதுத்தா பேசற நாயி? இப்பமே கார் சாவிை தந்துட்டுக் கிளம்பு..."

வெளி கேட் வரை கீர்த்திவாசனின் கூச்சல் கேட்க, இவர் நடை தளர்த்தி சற்று எட்டிப் பார்த்தனர்.

"யாரு...யாரு நாயி... உழைச்சா நாயா? குரைச்சாத்தான் நா இப்ப கடிக்கட்டுமா?" பதிலுக்கு யாரோ காட்டமாய் கத்தல கேட்டது.

ஆதவன் கால்களை எட்டிப் போட்டு கீர்த்திவாசன் எல்லைக்குள் புக அம்ருதாவும் குடுகுடுவென பி தொடர்ந்தாள்.

"கையையா ஓங்கற நாயே?"

கைகலப்பும், யாரோ விழும் சத்தமும் கேட்டு ஓடினாள்.

ரௌத்திரமாய் நின்று கொண்டிருந்தார் கீர்த்திவாசன்... அவர் தொந்தி, சொட்டைத் தலையும், கட்டம் போட்ட சிவப்பு சட்டையும் அவர் கோபத்தைச் சற்று கோமாளித்தனமாக்கிக் காட்டின.

காக்கி சீருடையில் கீழே கிடந்த ஒருவன் எழ முயற்சித்து கொண்டிருந்தான்.

"என்ன ஸார்?"

"வேலைக்கார குட்டி ஒருத்தியை ஏத்திகிட்டு எங்காரிலே ரவுன்ட் போயிட்டு வர்றாரு துரை. வேலைல சேர்ந்து ரெண்டு மாசம் முடியறதுக்குள்ள இத்தனை திமிரு என்ஃபோர்டு காரு இதுக உல்லாசத்துக்கா?"

விழுந்து எழுந்ததில் டிரைவரின் போதை சற்று இறங்கியிருந்தது.

"ராட்லிங்கு இருந்துது. நாளைக்கு ஃப்ரீ சர்வீஸுக்கு வண்டி போவும். அதுக்குள்ளே 'செக்' பண்லாம்னு கார எடுத்தேன் - ராணி ஆசைப்பட்டா - சரி ஏறிக்கோன்னது தப்பா..."

"அவ ராணி - இவன் ராஜாவா? கூஜாடா நீ... கூஜாவ கவ்விட்டு எம்பின்னால வர வேண்டிய நாயி குடிச்சுட்டு காரைத் துணிஞ்சு எடுத்திருக்க - போதையில மோதியிருந்தா...?"

கோபத்தில் தடுமாறியவர் அவனை உதைக்க காலைத் தூக்கினார்.

"விட்டிருங்க கீர்த்தி..."

கேட்ட குரலில் அனைவரும் திரும்பினார்கள்.

வந்திருந்தது விசாலம்.



"டிரைவர் என்ன நீ? முதலாளியை எதிர்த்து வாயாடற கைய ஓங்கறதும் சரியா? குடிக்கிறவன் என்ன ஜாக்ரதைய இருப்பே நீ... எட்டு லட்ச ரூபா வண்டிய உன்னை நம்பி... முதல்ல கிளம்பு..."

"அதையேத்தான் நானும் சொல்றேன். சாவின கொடுத்துட்டுக் கிளம்புன்னு..."

அவன் நீட்டிய சாவியை வாங்கிய ஆதவன் காரைத் தா ஓட்டிப் போய் காராஜுல் நிறுத்தினான். காராஜினுள் மற்றுமெ அம்பாஸிடரும் நிற்பதைப் பார்த்தாள் அம்ருதா. அவள் ட அதை அவசரமாய் பதிவு செய்தது.

"நன்றி ஆதவா-வாங்களேன் ஒரு வாய் காபி குடிச்சுட் போகலாம்... நல்ல சமயத்துக்கு வந்தீங்க... விசாலம் நீயுந்தா கீர்த்திவாசன் அழைக்க.

மூவரும் அவர் வீட்டுப் படியேறினார்கள்.

புதுப்பணக்கார வீட்டிற்கே உரிய ஆடம்பரம் அவர் வீட் நிறைய பளபளத்தது.

தன் கண்ணைக் கவர்ந்த விஷயங்களை எல்லாம் வ வீட்டை நிரப்பியிருந்தார்.

"கடவுளாய்த்தான் ஆதவனை தக்க சமயத்துல இங்க செய்தது..." என்றார் விசாலம்.

"பின்னே... கையை ஓங்கிட்டானே... ஆனா கட அவனுக்கு அதுக்கான தண்டனையைத் தராம விடமாட் பாரு..."

"விடுங்க ஸார்... குடிகாரன் புத்தி அவ்வளவுதான்."

"என்னை மட்டும் அடிச்சிருந்தான்... அவ கொன்னிருப்பேன். இதோ இது காஷ்மீரிலேருந்து வா செட் கத்தி..."

விசிறி போல காட்சியளித்த செட்டில் ஒரு கத்தியைப் பிடுங்கி, உறை உருவிக் காட்டினார்.

கத்தியின் கூர்மையை ரசித்து நீவின அவர் விரல்கள்.

அம்ருதா அச்சத்துடன் பின்வாங்கினாள்.

“இந்த வெட்டிப் பேச்செல்லாம் பேசி ஏனிந்த பெண்ணைப் பயங்காட்டறீங்க கீர்த்தி? கத்திய மூடுங்க...” என்று விசாலம் அதட்ட சூழல் சற்று சாதாரணமானது.

கீர்த்தி அரசியலை ஆதவனுடன் அலச, பெண்கள் ஒதுங்கினர். பொதுவான சில நிமிடப் பேச்சுக்களுக்குப் பின் விசாலம்.

“ஏன் அம்ருதா.. உங்கிட்ட சாரு பேசினான்னு சொன்னியே. இங்கே நடந்த சாவுகள் கொலையாய் இருக்கும்னு ஏதும் சொன்னாளா?” என இவள் அசந்து போனாள்.

“ஆ.. ஆமா... ஆனா.. அதிகமில்லை.”

“ஆனால் நீ விவரம் முழுசாய் தெரிய ஆதிகுளம் வர்ற அளவுக்கு...?”

விசாலத்தின் முகம் மேலும் புத்திசாலித்தனமாய் தெரிந்தது.

“ம்ம்” பேச்சு வராமல் தலையாட்டினாள் அம்ருதா. ஆனால் தலைக்குள் பல சிந்தனைகள்.

விசாலத்தின் புத்திக்கு அவள் தனிமைப்பட்டு விட்டது தப்பு.

ஒரு குடும்பத்தின் இழப்பும் கூட... கீர்த்திவாசனின் பணம் சம்பாதிக்கும் சாமர்த்தியத்துடன் இந்த கூர்புத்தியும் இணைந்திருந்தால் இருவரும் ஆதிகுளம் சாம்ராஜ்யத்தை அட்டகாசமாய் ஆட்சி செய்திருப்பார்கள்!

“ஏன்னா சாருமதி எங்கிட்டேயும் தன் சந்தேகத்தைச் சொன்னதுண்டு நான்தான் 'வாய மூடு நீ. இது ஆபத்தான பேச்சு'ன்னேன்.”



“இங்கே அதுபற்றி பேசினா யாரும் நம்ப மாட்டாங்கன் தான் பாளையங்கேட்டை போனாங்க.. சாருமதி டீச்சர்.”

“இப்ப பரலோகம் போயாச்சு...”

“உண்மை... கொஞ்சம் பொறுமையாய் இருந்திருக்கலாம்

“அதையேத்தாம்மா நான் உனக்குஞ் சொல்றே இத்தனை அவசரமாய் முடிச்சவிழக்கப் பார்க்காதே... அ உனக்கும் ஆபத்து...”

“உங்களுக்கு கொலை... கொலையாளி யார்னு தெரியுமா

கேட்ட போதே குரல் குழறி... முதுகு வியர்த்தது!

விசாலம் முகம் திருப்பிக் கொண்டார்.

ஆபத்துக்குத் தலைகொடுக்க யாருக்குத்தான் ஆசை?

“போலாமா அம்ருதா...?”

கேள்வியுடன் வந்த ஆதவனுடன், விடைபெற் நடக்கலானாள்.

“என்ன நடை சுறுசுறுப்பாயில்லை?”

“பயம்மாயிருக்குது ஆதவன்... நான்... நாளைக் கிளம்பிடலாம்னு இருக்கேன்...”

“ஏன் இந்தப் புது விளையாட்டு அலுத்திருச்சா?”

பாண்ட் பாக்கெட்டுகளில் கை விட்டபடி விசராந்திய உடன் நடந்தவனை இரக்கத்துடன் பார்த்தாள்.

“இது விளையாட்டிலை. வினை... அதான்.”

“அடடே, கீர்த்தி ஸாரும் இதையேத்தான் சொன்னார்.”

“ஏன்... எதுக்கு?”

“இன்னைக்கு அமாவாசையாம். நாயரோட கூட்டாளி வந்திருக்காங்களாம்... இன்னைக்கு ஏதோ பலி, பூஜை நடக்

போகுதுன்ற சங்கதி ஸார் வரைக்கும் வந்திருக்கு. அது தொடர்பாய் பேசறப்போ பேய், பிசாசோட தொடர்பு ஏற்படுத்திக்கறது விளையாட்டில்லை... வினைன்னார்..."

"நாம கொலையாளியை நெருங்கறதும் வினைதான்... தவிர உங்களையும் என்னோடக் கூட்டிட்டுப் போறது... சரியில்லை..."

"இல்லையே... கழுத்திலே சங்கிலியைக் காணுமே..."

தன் கழுத்தைச் சுற்றிலும் விரல்களை பாவனையாய் துழாவினான் ஆதவன்!

"நானாத்தான் வர்றேன் அம்ருதா... நீ கட்டி இழுத்துப் போகலையே?"

அவள் சிரிக்கவில்லை... சஞ்சலத்துடன் சொன்னாள்.

"உங்களுக்கு விஷயத்தின் தீவிரமே புரியலை..."

ஆனால் அன்றிரவே அவனுக்கு அது புரிந்து போனது. வழக்கம் போல வீட்டு நாய் குட்டியை உலாவ வெளியே அழைத்துப் போனவன் அடுத்த பத்தாம் நிமிடம் வியர்த்து, வெளுத்து ஓடி வந்தான்...

"அப்பா... அப்பா... போலீசுக்கு போன் போடுங்க."

அவன் கத்தலின் தீவிரத்தை உணர்ந்த மற்றவர்களும் ஹாலுக்கு வந்து விட்டனர்.

"என்ன... என்னடா விஷயம்?"

"கொலை... கொலையாயிருக்கு..."

"யாரு? எங்க?"

இப்போது அவன் தகப்பனுக்கும் உடம்பு நடுங்க ஆரம்பித்திருந்தது.

"நம்ம வீடு தாண்டி குப்பை மேடுல்ல... அது பக்கத்துல... அப்பா நீங்க உக்காருங்க... நாம் போடறேன் போன்."



"கடவுளே யாருன்னு சொல்லுடா..."

தாய் பதறினாள்.

"டிரைவர்... கீர்த்தி ஸாரோட கார் டிரைவர்... ஜூ
குலைச்சது... இழுத்துட்டு ஓடுச்சு... அதைப் பிடிக்கத்தான் வ
பக்கமாய் மரங்களுக்குள்ளே போனேன். கால்ல தடுக்கிடுச்
குனிஞ்சு... பார்த்தா... அதுதான் பிணம்!"

"இதென்னடா... அப்ப முதல்ல கீர்த்தி ஸாருக்கு வேணா
போன் போடலாமா... அவர்ட்ட சொல்லாம... எப்படி நே
போலீசுக்கு..."

"வேணாம்ப்பா போலீசுக்குத்தான் போடணும். என்
டிரைவரைக் கத்தியால குத்தி கொலை செஞ்சதே கீர்
ஸார்தான்!"

"என்ன நீ பார்த்த மாதிரி சொல்ற?"

"அம்ருதா நாம பார்த்தோமே கீர்த்தி ஸார் வீட்டி
காஷ்மீர் கத்தி விசிறியாட்டம்? அது இப்ப இவன் முது
நிக்குது."

கன்னத்தைப் பொத்தி கண் மூடினாள்.

"ஐயோ..."

"என்னடா புதுக் கதை சொல்றே...?"

"இருக்கம்மா... விவரமாய் சொல்றேன்."

போலீஸாருக்கு விவரம் தெரிவித்தவன், உட்கார்
பெற்றோரிடம் மாலை தாங்கள் பார்த்த சம்பவத்தை
சொன்னான்.

"அடடே... நம்ப முடியலியே?"

"அப்புறம்ப்பா... இன்னொரு விஷயம்... அம்ருதா இ
வந்தது கூட கொலையாளி யாருன்னு கண்டுபிடிக்கத்தான்..."

"இந்தக் கொலை நடக்கப் போறது உனக்கெப்படிம்மா முன்னமே தெரிஞ்சுது?"

"இதிலைங்க... சென்னி, சுப்பு, சாரு டீச்சர், ஜெஸிம்மா, அத்தன பேருமே கொலைதான் செய்யப்பட்டிருக்காங்க..."

"இதென்னம்மா புதுக்கதை?"

அம்ருதா தன் கதையை விளக்கமாய் சொன்னாள்.

பெரியவர்கள் இருவரும் வாய்திறந்து கேட்டுக் கொண்டார்கள்.

**கொ**லையுண்ட டிரைவரின் குடும்பம் இருந்தது இருபது மைல்களுக்கு அப்பால் உள்ள ஒரு சிற்றூர் என்பதால் போலீசாருடன் சேர்ந்து ஆதவனும் அலைந்தான். இந்நிலையில் அம்ருதா உடனே தன் ஊருக்குக் கிளம்ப முடியவில்லை.

தவிர முதல் நாள் மென்னியை இறுக்கிய அந்தப் பயம் தளர்ந்ததும் மீண்டும் பழைய உத்வேகம் அவளைச் செலுத்தியது.

கீர்த்திவாசனை போலீஸ் கைது செய்து விசாரணை நடத்துகிறார்கள் என்று அறிந்தவர்களுக்குச் சற்று பாவமாய் கூட இருந்தது. அவர் வீட்டு அலங்காரக் கத்திதான் கொலைக்குக் காரணம் என்பது பலத்த சாட்சி. அதிலும் அவர் தன் முன் விரிக்கப்பட்ட வலையில் சுலபமாகவே விழுந்து விட்டார் என்பது ஆதவன் சொன்னதிலிருந்து புரிந்தது.

'நா இந்தக் கொலையைச் செய்யலை. ஆனா டிரைவர் ரவிக்கு இந்த முடிவு வரும்னு நான் சொன்னது உண்மை எஜமானனையே கை நீட்டறவனுக்குத் தெய்வம் தண்டனை தராதா என்ன? அந்த சுப்புப் பய கூட என்னை மாதிரியே பேசி நடிச்சுக் காட்டினான். சட்டைக்குள்ளே அரை மூட்டை வைக்கோலை திணுச்சுகிட்டு... அதான் எந் தொப்பையாம்! என்னை மாதிரியே



நடந்து பேச, சுத்திலும் மத்த வேலைக்கார கழுதைங்க உக்காந்
ரசிச்சு சிரிச்சதுங்க... சம்பளமும் சோறு தர்றவரை நன்றியில்லாம
அதுக்கான தண்டனைதான் அவன் சாவு. அதுக்கு முன்
சென்னி வாய்த்துடுக்கா என்னை எதிர்த்து பேசினா. பாத்ரு
கழுவ முடியாதாம். விருந்தாள் வந்தா காபி கலந்து கொணாந்
வைக்க, எடுக்கன்னு ஷோவான வேலைக்குத்தான் அ
பொருத்தமாம்! எப்படி?'

ஷோ வைக்கிற அளவு அழகா அந்தக் கழுத? நாலுநா
ஷோவா நின்னுட்டு அஞ்சாம் நாளு நம்ப மடியி
உக்காந்துடுவா? பல்லைக் காட்டற அந்த சிறுக்கி திட்ட
எனக்குத் தெரியாது? வேலைய விட்டு அனுப்பினதுக்கு ஊ
முழுக்க என்னைப் பத்தி அவதூறு பேசினா... அதுக்குப் பலனா
பேசினவ வாயில விஷம் இறங்கிருச்சு... கடவுள் தண்டனை
கடுமையானதில்ல?

படுக்கையில கிடந்த ஜெஸி அவளுமில்ல என்னைப் பத்
விஷமம் பேசியிருக்கா? ஓசியில யாரு பாலும் சீம்பாலும் கேட்
அதான் நாறுறபாலை அனுப்பறார்னு பேசலாமா? அதுவ
கிழவன் ஏதோ விஷங்கலந்துதான் அனுப்பறான்னதுக்
தண்டனை உடனே கிடைச்சிருச்சே... சாரு டீச்சர் கூட கேபி
சமாச்சாரத்துல ரங்கன் பக்கம் பறிஞ்சு பேசினதாய் கேள்
ஆக கடவுள் எம் பக்கந்தான்... என்னைப் பத்தி அபாண்ட
பேசினா அவங்களுக்கு எல்லாம் மரணந்தான் தண்டனை!'

"கொலை செய்யலைங்கறதோட நிறுத்தாம தண்டனைன்
உளறலம்மா? இத்தனை வருஷம் ஒண்டியாக் கிடந்தவர் பாவ
என்ன ஏது பேசன்னுங்கற விவரம் போதலை..."

"என்ன நீ... அவர் ஏதோ அப்பாவி நிரபராதிங்கறாப்
பேசற? அன்னைக்கு நீ விசாரிக்கச் சொன்ன விபர
கேட்டாச்சு."

"என்ன?"

"போலீஸ் விசாரணையில சாரு டீச்சரை ஜங்ஷனிலே மோதிப் போன காரோட நம்பர் 1107-ன்னு ஒரு பொண்ணு சொன்னதாய் பதிவு செய்திருந்தாங்க. அதையும் தோண்டி. எடுத்துப் பார்த்தா அத்தனையும் கச்சிதமாய் பொருந்துது... இந்த சாட்சி ஒன்னே போதுமே..."

அவன் சொல்வதை அவள் பிரமிப்புடன் கேட்டபடி நின்றாள். ஏனெனில் அன்று கீர்த்திவாசனின் காராஜில் அவள் பார்த்த இரு கார்களின் எண்ணும் ஒன்றேதான் – அது 1107!




இப்போதைக்குத் தான் செய்யக்கூடியது எதுவுமில்லை... ஒன்றைத் தவிர...

விசாலத்தின் வீட்டிற்குக் கிளம்பினாள் அம்ருதா. புது ரவிக்கை ஒன்றில் ஊக்குகளைப் பொருத்திக் கொண்டிருந்த விசாலம் புன்னகையுடன் வரவேற்றார்.

"வாம்மா- என்ன... தனியா வந்திருக்க?"

"ஆதவன் போலீஸாரோடு அலையறாரும்மா... தனக்கும் இந்தக் கொலையிலே நெருங்கிய சம்பந்தம் இருக்கறதாய் நினைப்பு அவருக்கு... அவங்கம்மா பயப்படறாங்க. புலம்பறாங்க. உங்ககிட்ட பேசினா கொஞ்சம் ஆறுதலாய் இருக்கும்னு பட்டது. அதான் வந்தேன்!"

"நானே கூட உன்னை வந்து பார்க்கறதாய் இருந்தேன்... இரு கொஞ்சம் பால் சூடு பண்ணி எடுத்துட்டு வரேன்."

"வேணாம்மா... நான் பால் குடிக்கிறதில்லை. சின்ன வயசிலேக் கூட எனக்கு அந்த சுவை பிடிக்காது."



"கால்சியம் சத்து போதாமத்தான நாற்பதுக்கு மே பொம்பளைங்களுக்கு ஆஸ்டோபரோஸிஸ் எல்லாம் வரு மளுக்குன்னு எலும்பு முறியறதுக்கு முன்ன மருந்தாக் க குடிக்கலாமே?"

அதட்டலுடன் உள்ளே போனார்.

பெரிய வெள்ளி டம்ளர் நிறைய பால் வந்தது. மறுக் வழியின்றி அதைக் கையில் வாங்கின நேரம் வெளி சைக்கிள் மணியொன்று அவசரமாய் அழைப்பு பே 'கிணுகிணுத்தது.'

"இதோ வர்றேம்ப்பா... ரெடியாயிடுச்சு..." இர ரவிக்கைகளை நீவி,மடித்து ஒரு கவரில் இட்டு எடுத் கொண்டு வெளியே போனார் விசாலம்...

இத்தனைப் பாலையும் தன்னால் நிச்சயமாய் கு முடியாதென்ற எண்ணத்தில் அங்கிருந்த பூஜாடிக்குள் ப பாலை ஊற்றினாள் அம்ருதா. ஏதோ பேசியபடி விசாலம் திரு நேரமாக சொச்ச பாலையும் ஜாடிக்குள் ஊற்றிவிட்டு சமர்த் காலி வெள்ளி டம்ளருடன் நின்றாள்.

"தாம்மா டம்ளரை உள்ளே வச்சிட்டு வர்றேன்."

"நானேக் கழுவிடறேம்மா..."

உரிமையுடன் உள்ளே போனவள் அங்கிருந்த மேலும் பாத்திரங்களைக் கழுவி கவிழ்த்த போது விசாலம் சமைய முடித்து அடுப்பை அணைத்தாள். "வர்றியா அம்ரு பின்னால சோலை மாதிரியாய் பழ மரங்களிருக்கும் நடந்து பேசலாம்... இங்கே யாராவது வந்துட்டே இருப்பாங்க..."

"ம்ம்... தலை வலிக்கறாப்பல இருக்குது... கொஞ்சம்."

"காத்து பட்டா நல்லது வா..."

சற்று முன் பெய்திருந்த கோடை காற்று கமகம இலைகளின் நுனிகளில் எல்லாம் வைரப் புல்லாக் மழைத்துளிகளின் ஜொலிப்பு!

"கீர்த்தி ஸார் கைது ஆனதுல... உங்களுக்கும் வருத்தமாயிருக்கும் இல்லியா...?"

விசாலத்தின் கண்கள் ஒரு புரிதலுடன் இவளை ஏறிட்டன.

"வெகு காலமாய் இதே ஊரிலிருந்தவங்க இல்லியா... நீங்க எல்லாரும்..."

"எங்களைப் பற்றிக் கேள்விப்பட்டயாக்கும்?"

"ம்ம்..."

"ஒரு வழியாய் அப்பமே அவரைப் பற்றி யூகிச்சுட்டேன்."

"உங்க மூளை நல்ல கூர்மை."

பாராட்டில் விசாலத்தின் முகம் இளகியது.

சோலையின் இருளில் நடப்பது சற்று அச்சம் தர, இவள் நடை தடுமாறியது.

"நடக்க சிரமமாயிருக்கும் இல்லையா... இப்படி உக்கார்."

இப்போது விசாலத்தின் குரலும் முகமும் வேறுபட்டிருந்தன! அப்படியானால் பாலில் ஏதோ கலக்கப்பட்டிருக்கிறது. தான் அதைக் குடித்து விட்டதாய் கருதி வரும் பேச்சு இது...

"ஆமா... தலையும் கனக்குது..."

அமர்ந்தவள் பொய்யுடன் கண்களை மூடினாள்.

விழித்தபோது விசாலத்தின் கையில் ஒரு மப்ளர் இருந்தது. அதை அவள் கீர்த்திவாசனின் கழுத்தில் பார்த்ததாய் ஞாபகம்...

"இது கீர்த்தி ஸாருது இல்ல?"

"எந்த நேரத்திலும் நிலையிலும் உன் புத்தி மங்கலை... ம்ம்? ஜாமீனில வீடு வந்திருக்கிற கீர்த்தியை முழுசாய் உள்ளேத் தள்ளணும்னா... உன்னையும் கொல்றதுதான் வழி அம்ருதா..."

"நான்... என்னை... ஏன்?"



"கண்டுபிடிச்சுட்டிலே? நான்தான் கொலையாளிங்கறன கண்டுட்டியே... உம்முகத்தில தெரிஞ்ச பயமே உன்னை காட்டிக் கொடுத்திருச்சு..."

எழ முடியாதவள் போல பாவனை செய்தாலும் நிஜமாகவே எழ முயற்சித்தாலும் முடியாதபடி அச்சத்தில் அம்ருதாவி உடல் இரும்பாய் கனத்துத் தொய்ந்தது.

ஆனாலும் புத்தி மசமசக்கவில்லை. விசாலத்தைப் பே வைக்க வேண்டும். தூண்டில் வீசினாள்.

"பாவம்... கீர்த்தி ஸார்... அனாவசியமாய்..."

"என்னைக் கல்யாணம் பண்ண மாட்டேன்னு முறுக்கி கிட்ட அவனோ பாவம்? இந்நேரம் அவனோட மாளிகை நிறை வாரிசும் பெருமையுமாய் வாழ்ந்திருக்க வேண்டிய என்னை இப்படி மூளியாய்நிறுத்திட்டானே. நான் பவுசோட இருந்த கீர்த்தி வெறும் பதர் -

ஆனா அவன் மேலே வருவான்னு எனக்கொ நம்பிக்கை. அப்பா தடுத்தப்பக் கூட நாங்க பிரியலை... பிற அவந்தானே என்னை ஒதுக்கினான்?"

"அழகா... அறிவாய் இருக்கற உங்களையா?"

"முட்டாள்தான அவன்! அவனைப் பழிவாங்க தெய்வ கொல்றதாய் நினைக்கற முரட்டு மூடன்! என் ஆத்திரத்தி அவனை அன்னிக்கே ஒழிச்சிருக்கணும்... ஆனா அவனை சிறுக சிறுக வதைக்கறது அதிகச் சுகமில்லையா? அவனுக் வாரிசு வரக்கூடாதுன்னு நினைச்சேன். மூலிகைகளைப் பற் படிச்சப்போ அதுக்கான மருந்தை செய்றது சுலபம்னு தோணுச் டாக்டர்ட்ட கேட்டு மேலும் அதுபற்றி தெரிஞ்சு எந்த மூலிகை காக்கும், எதெது அழிக்கும்னு புரிஞ்சுது. காரியத்தி இறங்கினேன். ஜெஸிக்குக் கொடுத்து அவ கருவைக் கலை அதே மருந்தை சித்ராவுக்கும் - அதான் கீர்த்தியோ மனைவிக்கும் கொடுத்தேன். கஷாயமாய் வச்சுக் கொடுத்

கருப்பையை புண்ணாக்கிடும் அது - பிறகு ஆயுசுக்கும் அவ மலடிதான்.."

ஆக கீர்த்தியின் மனைவி குழந்தைப் பெறாமலிருக்கும் பயிற்சியை விசாலம் பெறுவதற்காகவே, பரிசோதனை எலி போல ஜெஸிம்மா மலடியாக்கப்பட்டிருக்கிறாள். அம்ருதாவின் முதுகுதண்டு சில்லிட்டது.

"எம்பக்கத்து வீட்டிலேருந்த மேஜரும் ஜெஸியும் ஆனந்தக் குடித்தனம் நடத்தறதை நான் ஏன் பாக்கணும்? நரம்புக் கோளாறு ஏற்படுத்தற வேரை நிழல் காய்ச்சலாக்கிப் பொடி செய்து அவளுக்கான பாலிலே கலந்துத் தர அவளும் முடங்கிட்டா... இவங்கள்ல ஒருத்தராவது எங்கிட்ட வந்து 'ஏம்மா என்ன பிணக்கு உங்களுக்கு இடையே'ன்னு கேட்டு கீர்த்தியோட என்னை சேர்த்து வைக்க முயற்சிக்கலியே.. அவங்கவங்களுக்கு அவங்கவங்க சுகம்... ம்ம்?"

விசாலத்தின் வழக்கமான அறிவுக் களையிழந்து முகம் வெறியால் நிரம்பியிருந்தது.

"ஜெஸி கொஞ்சம் தேறுறாப் போலிருந்தால் பாத்ராயதி வேரை அரைச்சுத் தந்திடுவேன். அவளும் 'கீர்த்தி வீட்டுப் பாலு சரியில்லை. கெட்டுத் திரிஞ்ச பாலை நமக்கு அனுப்பிடறார்ன்னு' முணுமுணுத்துட்டே கட்டில்ல கிடந்தா. கீர்த்தி பொண்டாட்டிக்கும் இதையேத்தான் கொடுத்தேன். அளவு மிளகளவு கூடிப் போச்சு. குறைப்பிரசவத்துல நாராயிருந்த அவ அதனோட வீரியம் தாங்காம ஒரேடியாய் போயிட்டா.."

திருப்தியாய் விசாலத்தின் தலை ஆடியது.

ஆக வயிற்றிலேயே கரைந்த கருக்களோடு கீர்த்தி வாசனின் மனைவி சாவிற்கும் விசாலம்தான் காரணம்.

தலைக்குள் பூரான்கள் நெளிந்தாற்போன்ற அருவெறுப்பில் தலையைக் குலுக்கினாள். பேச ஆரம்பித்து விட்ட விசாலம்



மடைதிறந்த தினுசில் பாய்ந்து கொண்டிருந்தாள். பல காலப
அவளுக்குள்ளே குமைந்த வக்கிரங்கள் வார்த்தையாய் வடி
வெளியேறின.

"பால் காசு தரப் போனப்போ கீர்த்தியை சென்னி பதிலுக்
பதில் பேசினதை நான் கேட்டேன். 'இத்தனை நாள் எவ்வீ
உப்பைத் தின்னதுக்கு இத்தனைப் பேச்சா'ன்னு கீர்த்தி க
'கிழவா, உன்னை எம்முந்தானையில முடிஞ்சிடுவே
பயந்தான உனக்கு?'ன்னு கேலி பேசினா அவ... அவ கிண்
என்னை உசுப்பிடுச்சு... டாக்டர்ட்ட உடம்பு சரியில்லை
வந்தவளை,

'வா உன் உடம்பு பலகீனமாயிருக்கு... வேற எந்
கோளாறுமில்லைன்னு' சொல்லி உனக்குத் தந்த அ
பொடியைப் பாலிலே கலக்கி குடிக்கத் தந்தேன்.. ஒரு மாதிரி
வீடு போனவ, ஒரேயடியாத் தூங்கிட்டா... உடம்பு நீலமான
விஷங் குடிச்சு சென்னி தற்கொலை பண்ணிகிட்டாங்கற பேச்

உன்னிப்பாய் கவனித்துக் கொண்டிருந்தாள் என்றா
முகத்தை அசமந்தமாய் வைத்துக் கொண்டாள் அம்ருதா.

"முட்டாள் கீர்த்தி அப்பமே தெய்வம் தன் பக்கங்கற ம
மார்த்தட்ட ஆரம்பிச்சான். ஆகா. இதுதான் இவனுக்குச் சரிய
வலைன்னு அதையே வலுவாய் விரிச்சேன். சுப்பு அ
முறை கீர்த்தியை கேலி செய்தப்ப... வேலைக்காரங்க மூ
விஷயம் எங்காதுக்கு வர, சுப்பு என் இலக்கு ஆனான். த
அவந்தான மேஜர் வீட்டுக்கும் பாலூத்தறது? ஒரு தடவை
அங்கே பாலைக் காய்ச்சி ஜெஸிக்கானதில நரம்பை இறு
பொடியைக் கலக்கறதைப் பார்த்துட்டு,

'இதனாலத்தான் ஜெஸிம்மா பாலு நாறுது. குமட்டு
றாங்களா'ன்னான் பயல். 'மருந்தைத் தனியா சாப்
மாட்டேங்கறாளே.. அதான் இப்படித் தர்றேன்'னு சமாளிச்
ஆனாலும் சுப்பு வாயை ஒரேடியாய் மூடிடறது நல்லதில்லை
அதான்."

"ஒரு கல்லுல ரெ... ரெண்டு மாங்கா..."

"அதான். நானிருந்த லைப்ரரிப் பகுதியிலேருந்து மறுபக்கம் போக இடையே ஒரு கதவு உண்டு. அது வழியாப் போய் காரியத்தை முடிச்சுட்டேன். சின்னப் பய... சுலபமான வேலை..."

தன்னையே மெச்சுவதாய் சிரித்தார் விசாலம்.

அது விகாரமாய் விரிந்தது.

தன் சாகசங்களைப் பற்றி விவரிப்பதில் அவளுக்குப் பெரிய திருப்தி உண்டாவது புரிய, மேலும் பேசத் தூண்டுவது எளிதானது.

"அப்படீன்னா சாரு டீச்சர்...? அது விபத்துதானா?"

"விபத்துதான்... எங்கையால நேர்ந்த விபத்து!"

தன் இரு கைகளையும் உயர்த்தி கோஹினூர் வைரத்தைப் பார்க்கும் பரவசத்துடன் அவற்றைப் பார்வையிட்டார்.

"சாரு என்னை சந்தேகப்பட்டுட்டாங்கறது புரிஞ்சுது. அவ மறுநாள் பாளையங்கோட்டை போலீஸ் ஸ்டேஷன் போறது ஜெஸி மூலமாய் எனக்குத் தெரிஞ்சது. ஜெஸிட்ட இது ஒரு பிரச்சனை மனசுக்குள்ள எதையும் வச்சுக்காம டமாரம் போடறது. கீர்த்தி அனுப்பற பாலு விஷம்னு வரவங்க போறவங்கிட்டெல்லாம் சொல்ல, வேற விஷந் தந்து அவ வாயையும் முழுசாய் அடைச்சுட்டேன். அதுக்கு முன்னே... ஆங் சாருமதியை மறு பஸ்சிலே ஏறி தொடர்ந்து போனேன். அவ ஜங்ஷனிலே சாப்பிடாம உடனே பாளையங்கோட்டைக்கு மறு பஸ்ஸைப் பிடிச்சுக் கிளம்பியிருந்தா எனக்கு கெட்ட நேரந்தான்... ஆனா அத்தனையும் எனக்கு நல்லாவே அமைஞ்சுதே... சாரு சாப்பிட்டு வெளியே வர, நா அவளை ஒரேத் தள்ளாய் வேகமா வந்த அந்தக் கார் முன்னாடி தள்ளினேன்... அத்தனை நெரிச்சல் யாரும் அதைக் கவனிக்கலை."



தன் முகத்தில் உணர்ச்சிகளைக் காட்டாமல் அ
யக்கமாய் இருப்பது போல் காட்ட அம்ருதாவிற்கு பெருமு
தேவையாயிருந்தது. இதயம் முரசாய் அடித்தது.

"அது கீர்த்தி ஸார் கார் இல்லையா... அதே கார் நம்ப
சோ... சொன்னாங்க...?"

"நீயும் புத்திசாலிடி பெண்ணே! சரியான கேள்விக
கேட்கிற பார்த்தியா?"

"ஐயோ மோதிட்டு போன கார் நம்பர் 1107... யாராவது இ
போலீசுட்ட சொல்லுங்கன்னு நாடகம் போட்டது நாந்த
அதைக் கேட்ட இன்னொரு பொண்ணு அதைப் போலீசிட்
சொல்லியிருக்கணும். அதுக்கு முன்னயே நான் நழுவிட்டே

எத்தனை தந்திரம்? விரக்தி அடைந்த புத்தி புழு
நாறிவிட்டது போல... அல்லது எத்தனையோ நல்ல
செயல்பட்டிருக்க வேண்டிய திறமை... மனதுக்
விசாலத்திற்காக பரிதாபப் பட்டாள் இளையவள்.

"சாருவை மோதின கார் நிற்காமல் போனது என் அ
அதிர்ஷ்டம்... எதிர்பாராத விபத்தின் அதிர்ச்சியில், குற்றம்
மேலே இல்லைங்கற நிச்சயத்தில் கார்காரன் ஓடிட்டா
நின்னிருந்தால் விஷயம் வேற மாதிரியாயிருக்கும்..."

"இதெல்லாம் தேவையா கீர்... கீர்த்தி ஸாருக்கு? பே
உங்களைக் கல்யாணம் பண்ணியிருக்கலாம்."

திக்கித் திணறி பேசுவதாய் பாவனை செய்தாள்.

"அவன் என்னை அன்னைக்கேப் புரிஞ்சுகிட்ட
பெண்ணே... எனக்கு அறிவு இருந்தாலும் அதை அடக்கி அ
அளவு வெறியும் இருந்துச்சே...

பார்வையை இலக்கின்றி நிறுத்தி பேச்சைத் தொடர்ந்
"அப்ப நான் ஒரு பூனை வளர்த்தேன். பெர்ஸியன் ஜாதி. கறு
சாம்பலுமா நீலக் கோலிக் குண்டாட்டம் கண்ணுமாய் அழ

பூனை. கீர்த்திக்கு அதை ரொம்ப இஷ்டம்... எங்கிட்டப் பேசும் போதும் அதை மடியில் வச்சு தடவிட்டே இருப்பாரு... என்னை மடியில போட்டுக் கொஞ்சாம... ஒரு பூனைய பெரிசு பண்ணினதும் எனக்குப் பிடிக்கலை... வேணாம்னாலும் கேக்கலை... அன்னைக்கு போகிப் பண்டிகை. பெருசா வளர்த்த தீயிலே வேண்டாததை எல்லாம் போட்டு எரிச்சிட்டிருந்தாங்க... கடைசியா எங்க வீட்டில வேண்டாம்னு கழிச்ச தலையணை ரெண்டும் திகுதிகுன்னு எரிஞ்சிட்டிருந்துச்சு... அன்னைக்கு நான் அரக்குல பட்டுப் பாவாடையும் சந்தன நிற தாவணியுமாய் நின்னேன்... தீயோட செம்மை எம்மேலே விழுந்திருந்தது. என்னைப் பார்க்க எனக்கே ஆசையாயிருந்தது. சுற்றிலும் யாருமில்லை... இந்த முட்டாள் வழக்கம் போல பூனையத் தூக்கி வச்சுத் தடவினான். எனக்கு ஆத்திரம் வருமா வராதா? பக்கத்துல குப்பை அள்ளிட்டு வந்த காலிச் சாக்கு கிடந்தது. பூனையைப் பிடுங்கி அதுல போட்டு முறுக்கிக் கட்டி தீயிலே தூக்கி வீசிட்டேன்.''

அம்ருதாவின் மூச்சையடைத்தது...

"அன்னைக்கு என்னை விட்டதுதான் கீர்த்தி - திரும்பிப் பார்ப்பேனானுட்டான். கோழைப் பயல். என் கோவம் மீறுனால் அவனையும் போட்டு எரிச்சிடுவேன்னு பயந்துட்டாம் போல... இதோ இப்பவும் நான் எரிக்கலையா? அவன் வாழ்க்கையை, சந்தோஷத்தை, வாரிசை... எல்லாத்தையும் பொசுக்கி ஊதித் தள்ளிடலை நான்?''

குரலை உயர்த்தாமலேயே குரூரமாய் பேசிச் சிரித்தார் விசாலம்.

"அன்னைக்கு டிரைவரோட கீர்த்தி வாக்குவாதம் செய்தப்போ பார்த்துட்டேன். கீர்த்தி வீட்டில அவன் காட்டின கத்தியை நீங்க போன பிறகு அவனுக்குத் தெரியாம ஒரு துணியில சுத்தி எடுத்து வந்துட்டேன். அதுல தொட்டுத் தடவின அவன் கைரேகை மட்டுந்தான் இருக்கும். முன்னமே டாக்டர்ட்ட



இருந்து ஒரு க்ளவ்சையும் திருடி வச்சிருந்தேன். அதை போட்டுகிட்டா நல்ல பாதுகாப்பு... பிரச்சனை இல்ல பாரு...''

"நாயர்?"

"அந்த முட்டாள் அறுக்கறதெல்லாம் சேவலைத்தா அதை வெட்டி ரத்தத்தை வீடெல்லாம் பூசிட்டு பூ மாந்திரீகம்னு அவன் பண்ண கலாட்டா எனக்கு வசதியா போச்சு. ஊருலே எழும்பற கொஞ்சம் சந்தேகத்தையும் நா பக்கமாய் திருப்பி விட்டுரலாம்...''

தன் பலத்தை எல்லாம் திரட்டி தயாராய் வைத்திரு அம்ருதா சட்டெனப் புரண்டாள்... உருண்டு விலகி எழு ஓடியவளைத் திகைப்புடன் பார்த்த விசாலம் மறுகண வெறியுடன் துரத்தினார்.




"கேஸ் முடிஞ்சிருச்சுன்னு எல்லாரும் நினைச்சிரு நீ இப்படி ஒரு சுழட்டு சுழட்டிட்டியே...''

ஆதவனுக்கு இன்னும் முழுசாய் வியப்பு விலகவில்லை

"உண்மையான குற்றவாளியைத்தானே பிடிக்கணும். நீ பிடிச்சு வச்சிருந்த கீர்த்தி நிரபராதியில்லையா?'' பொறுமைய விளக்கினாள்.

"ஆரம்பத்திலேயே சொன்னது போல உனக்கு அசட் துணிச்சல்... மறுபடி அதையே சொல்றேன்... இல்லைன் சந்தேகம் தட்டுன பிறகும் தனியா விசாலம்மா வீட்டுக் போவியா நீ?''

"சந்தேகத்தை ஊர்ஜிதம் பண்ணிட்டு உங்களை மறுபடி அங்கேக் கூட்டிட்டுப் போலாம்னு நினைச்சேன்."

"அந்தப் பாலைக் குடிச்சிருந்தா?"

சற்று சீற்றமாகவே அதட்டினான்.

"நிஜமாகவே எனக்குப் பால் பிடிக்காது ஆதவன். கொஞ்சம் அலட்சியமாய் அதைக் குடிச்சிருந்தா.. இப்ப நானில்லை..." உதடு பிதுக்கினாள்.

"கரணம் தப்பினா மரணங்கற முயற்சி அது அம்ருதா... நீ பிழைச்சது கடவுள் கருணைதான். ஆனா... நீ விசாலம்மாதான் கொலையாளின்னு எப்படி புள்ளி குத்தினே?"

"அன்னைக்கு கீர்த்தி ஸார் வீட்டில நாமெல்லாம் இருந்தோமே..."

"கத்தியெல்லாம் காட்டி, ஆட்டி, அவர் கத்தின அன்றுதானே?"

"ஆமா அப்ப விசாலம் எங்கிட்ட நேரடியாவே கேட்டுட்டாங்க. சாரு டீச்சர் எங்கிட்ட கொலைகளைப் பத்தி பேசியிருந்ததையும், அது தொடர்பாய்தான் நான் ஆதிகுளம் வந்திருக்கேங்கறதையும் கண்டு பிடிச்சு கேட்டாங்க."

"எங்கிட்ட இதுபற்றி நீ ஏதும் சொல்லலை..."

"எனக்கு கிடைச்ச அதிர்ச்சி அப்படி... கேளுங்க..."

"ம்ம்."

"உங்களுக்குக் கொலையாளி யாருன்னு தெரியுமான்னு நான் அப்பாவியாய் விசாலத்தையேக் கேட்டேன். அப்ப அவங்க முகத்தைத் திருப்பிட்டாங்க. ஆனா மறுபுறம் மாட்டியிருந்த ராஜஸ்தான் கண்ணாடி கேடயத்தில் அவங்க முகத்தின் பிரதிபலிப்புத் தெளிவாய் தெரிஞ்சது..."



"அதிலே..?"

"சாரு டீச்சர் குறிப்பிட்ட அந்த பயங்கர பார்வை
பார்த்தேன் ஆதவன்... யப்பா... எத்தனைக் கொடூரமான
அந்தக் கண்கள்ல. கோர இளிப்பு அவங்க உதட்டி
அப்பத்தான் எனக்குப் பொறி தட்டிச்சு. கொலையாளி யாரு
தன்னிடமே வந்துக் கேட்கிறளவு தான் சீலமாய் கொலைக
செய்திருக்கோம்ங்கற எக்களிப்புல அந்த இளிப்பு வெ
பட்டிருச்சு! அப்போது அதை மட்டும் கொண்டு நாம அவங்க
மடக்கிப் பிடிக்கற நிலைமையில்லை. சாட்சி ஏது?"

"என்னைக் கொல்லச் செய்த அவங்களின் முயற்சியும்,
அவங்க பூங்குவளையிலேயே அப்பாவித்தனமாய் கெ
வச்ச விஷப் பாலோட சாம்ப்ளும், விசாலம்மாவே எங்
விவரித்த கொலை முறைகளும் பலத்த சாட்சியம் இல்லை

"அவங்க சொல்லச் சொல்ல அசராம கேட்
இருந்திருக்கியே... அசாத்திய துணிச்சல்தான் உனக்கு..."

ஆதுரத்துடன் அவள் தோள்களைப் பற்றினான்.

"நாளை நான் ஊருக்குக் கிளம்பணும்... மூணே நா
இந்த மர்மத்துக்கான முடிச்சு அவிழும்னு நான் நினைக்
யில்லை. உங்க உதவிக்கு எப்படி நன்றி சொல்ல..? எவ்வ
சொன்னாலும் போதாது... ஆனாலும் ரொம்ப நன்றி. இப்ப
டீச்சரோட தமிழ்மணியும் வந்தாச்சு... இனி நான் கி
வேண்டியதுதான்..."

"உங்கப்பா எப்ப திரும்பறார்னே?"

"நாலு நாள்ல..."

"அஞ்சாம் நாள் நான், அப்பா அம்மால்லாம் ம
வர்றோம்."

"கண்டிப்பாக வாங்க. வீட்டிலதான் தங்கணும்."

"முதல்ல முறைப்படி பஜ்ஜி சொஜ்ஜி தாங்கம்மா மற்றதைப் பிறகு பார்த்துக்கலாம்."

"என்ன சொல்றீங்க?"

"ஆ... ஆங்? மேடம் இத்தனை அழகாய் அம்சமாய் துப்பறியறீங்க! இந்தச் சின்ன விஷயம் புரியாதா? உன்னைப் பெண் கேட்டு வர்றோம்மா! ஆதிகுளத்தில் கொலையாளிக்காய் வலை வீசினே... அதில் கூடவே இந்த நிரபராதியும் ஆயுள் தண்டனைக் கைதியாய் சிக்கிட்டானே!"

"ஐய..."

முதன்முறையாய் வெட்கத்துடன் சிரித்தாள் அம்ருதா!